Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu www.nimirvu.org

பார்வை – 44 மாசி, பங்குனி 2021 பக்கங்கள் – 24 விலை – ரூபா 20.00




## ஈழத்தமிழரின் உரிமைப்போரில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை




தென் ஆசிய பூகோள அரசியலும் இலங்கையும்



ஓர் இனத்தை அழிக்க சீனா சொல்லித்தரும் பாடம்



வியாபார பொருளாகும் தண்ணீர்

- ஆராயும் அறிவே நிமிர்வு -

# வியாபார பொருளாகும் தண்ணீர்




**“தண்ணீருக்கான பிரச்சினைகளை தீர்க்கவும், அதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் உலக தண்ணீர் தினமானது வருடாந்தம் பங்குனி மாதம் 22 ஆம் திகதி உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது”**

தண்ணீர் இன்று பல கோடிகள் புரளும் வியாபாரமாக மாறி விட்டது. தண்ணீரை காசு கொடுத்து வாங்க வேண்டும் என்று நாற்பது வருடங்களுக்கு முன்பு சொன்னால் யாராவது நம்பியிருப்பார்களா?

சூரிய சக்தி போன்று இலவசமாக கிடைக்க வேண்டிய ஒரு வளமே தண்ணீர். ஆனால், இன்று தண்ணீர் மாசுபடுவதனையொட்டி வரும் நோய்கள் பூதாகாரமாக்கப்பட்டுள்ளன. மனிதர்கள் பயத்தில் ஆழ்த்தப்பட்டுள்ளனர். அதை வைத்து சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் வியாபாரம் சூடு பிடித்துள்ளது.

வடக்கில் பல இடங்களிலும் கோடை காலத்தில் குடிதண்ணீர் சிக்கல் ஏற்படுகிறது. இந்த நேரத்தில் பிரதேச சபைகள், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, தொண்டு நிறுவனங்கள் இணைந்து மக்களுக்கு இலவசமாக நீரை விநியோகம் செய்து வருகின்றன. அதையும் தாண்டி சில பிரதேசங்களில் குடியிருப்பாளர்கள் தங்கள் வீட்டில் நல்ல தண்ணீர் கிடைக்கும் பட்சத்தில் தங்கள் மதிலுக்கு வெளியே குடிதண்ணீருக்கான குழாய் அமைத்து இலவசமாக குடிதண்ணீரை விநியோகித்து வருகின்றனர். இந்த முயற்சிகள் நிச்சயம் பாராட்டப்பட வேண்டும்.

**-சந்துரு-**

இப்போது பெருகிவரும் தண்ணீர் வியாபாரத்தால் ஒவ்வொரு இடங்களிலும் புதிது புதிதாக தண்ணீர்க் கடைகள் திறக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், அவற்றுக்கான அனுமதிகள் முறையாக வழங்கப்படுவதில்லை. இப்போது “பில்டர் வோட்டர்” “பில்டர் வோட்டர்” என்ற சத்தத்துடன் பல பட்டா ரக வாகனங்கள் வீதி எங்கும் படையெடுத்துத் திரிவதை காணக்கூடியதாய் உள்ளது.

குறிப்பாக யாழ் மாநகர சபை எல்லைக் குட்பட்ட பிரதேசங்கள் நீர்ப்பாவனைத் தேவை அதிகமுள்ள இடங்களாகும். அவையே பிரதான மாக நீர் விநியோகம் மூலம் நீர் பெற்றுக்கொள்ளும் இடங்களாகும். யாழ் மாவட்டத்தை பொறுத்த வரை நன்னீர் வற்றிப்போதல், நன்னீர் உவராதல், நன்னீர் மாசடைதல் போன்ற பிரச்சினைகள் நீண்ட காலத்திற்கு முன்பே ஆரம்பித்து விட்டன. விவசாயத்திற்காக கிணறுகள் மற்றும் ஆழ்துளைக்கிணறுகளை அதிகளவாக தோண்டி வருவதால் நீர் வற்றிப்போதலும் ஏற்பட்டு விட்டது. சனத்தொகை வளர்ச்சியின் மூலம் நீர்ப்பாவனை அதிகரிப்பதால் ஏற்கனவே யாழ்ப்பாண கரையோரப்பகுதிகளில் நீர் உவராதலும் ஏற்பட்டுவிட்டது.

யாழ்ப்பாணம் நீர் முகாமைத்துவத்தில் பின் தங்கி குடுவைத் தண்ணீர் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் நகரமாக மாறிவிட்டிருக்கிறது. நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை ஊடாகவும், மாநகர சபை ஊடாகவும் மாவட்டத்தில் உள்ள பிரதேசசபைகள் ஊடாகவும் நீர் விநியோகங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வறட்சி காரணமாக சில நேரங்களில் விநியோகங்கள் மட்டுப்படுத்தப்படுகின்றன.

நீருக்கான தேவை அதிகரித்துக் கொண்டே போகிறது. யாழ். குடாநாட்டை பொறுத்தவரையில் நிலத்தடி நீரே ஒரே ஒரு வளமாகும். அதுவும் தீர்ந்து போகக்கூடிய ஒரு வளமாக துறைசார் நிபுணர்களால் எச்சரிக்கை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தை பொறுத்தவரையில் நன்னீர் உவர்நீராகும் செயற்பாடு தொடர்ந்து நடந்து வருகின்றது.

யாழ்குடாநாட்டு நீரில் முதலாவதாக உவர்த்தன்மை, இரண்டாவது அதிக நைத்திரேட்டின் செறிவு,

மூன்றாவது வன் தன்மை (**hardness**) நான்காவது அதிக நுண்ணங்கி செறிவு போன்ற பிரச்சனைகள் காணப்படுகின்றன.

குடாநாட்டு நீர்க்கேள்வியை பூர்த்தி செய்ய இரணைமடு நீர் விநியோகம் மற்றும் உவர்நீரை நன்னீராக மாற்றுதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ்குடாநாட்டின் தற்போதைய நீர்க்கேள்வி நாளொன்றுக்கு 50,000 கனமீற்றர்களுக்கு அதிகமாக உள்ளது. அங்கு 2028 இல் எதிர்பார்க்கப்படும் சனத்தொகை 926,116 பேர். தேவையான நீர் அளவு 88,500 கன மீற்றர்கள். 2058 இல் எதிர்பார்க்கப்படும் சனத்தொகை அளவு 1,023,350 பேர். தேவையான நீரின் அளவு 177,700 கனமீற்றர்கள் ஆகவே பல்வேறுபட்ட நீர் முகாமைத்துவ திட்டமிடல்கள் அவசியமாக இருக்கிறது. (இந்த புள்ளி விபரங்கள் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் இணையத்தில் வெளியானவை)

இதெல்லாம் இவ்வாறு இருக்க பல சுத்திகரிக்கப்பட்ட நீர் விற்பனை நிலையங்கள் இங்கு இயங்கி வருகின்றன. அவற்றுக்கு எந்தவிதமான நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் இருப்பதாக தெரியவில்லை. உரிய அனுமதிப்பத்திரங்கள் இன்றி எவ்வாறு தண்ணீர் வியாபார நிலையங்கள் நடாத்தப்படுகின்றன?

இது தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் யாழ் மாநகரசபை மற்றும் யாழ் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையிடம் கேட்கப்பட்டது. நீர் வியாபாரம் தொடர்பாக மாகாணசபை மற்றும் மாநகர சபையினால் துணைவிதிகள் உருவாக்கப்படவில்லை. நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் வரையறுக்கப்படவில்லை. இக்காரணங்களினால் அனுமதி வழங்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என யாழ் மாநகரசபை குறிப்பிடுகிறது. அதற்கான வியாபார அனுமதிப்பத்திரங்களுக்கான தொகையும் அறவிடப்படவில்லை எனவும் கூறப்பட்டது.

அதே நேரம் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினாலும் நீர் விற்பனை நிலையங்களுக்கு அனுமதி தொடர்பான எந்த ஒரு நடைமுறைகளும் மேற்கொள்ளப்படவில்லை. தனியாரின் வேண்டுகோளுக்கிணங்க நீர் மாதிரிகளைப் பெற்று நீர் பரிசோதனை செய்யப்பட்டு அறிக்கை வழங்கப்படுவது மட்டுமே நடைபெறுகிறது.

**“சூரிய சக்தி போன்று இலவசமாக கிடைக்க வேண்டிய ஒரு வளமே தண்ணீர். ஆனால், இன்று தண்ணீர் மாசுபடுவதனையொட்டி வரும் நோய்கள் பூதாகாரமாக்கப் பட்டுள்ளன. மனிதர்கள் பயத்தில் ஆழ்த்தப்பட்டுள்ளனர். அதை வைத்து சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் வியாபாரம் சூடு பிடித்துள்ளது”**

ஏதேனும் அரச அல்லது உள்ளூராட்சி நிறுவனம், அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் இயற்கை அல்லது ஊற்று நீர் அல்லது நிலத்தடி நீர் பயன்படுத்துவதாக இருந்தால் அச்செயல் அல்லது திட்டத்தின் பூரண விவரங்கள் அடங்கிய திட்டத்தின் முன்மொழிவுகளை நீர் வழங்கல் சபைக்கு (water resource board) வழங்க வேண்டும். அச்சபையின் அனுமதியுடன், அதன் மேற்பார்வையின் கீழும் மற்றும் அதனால் வழங்கப்படும் உத்தரவுக்கு ஏற்றவாறும் அத்திட்டம் செயல்படுத்த வேண்டும். இவை எல்லாம் நீர் வழங்கல் சபையின் எழுத்துமூல அனுமதியைப் பெற்று செயற்படுத்தப்பட வேண்டும் .

வலி தெற்கு பிரதேசசபை தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் கடைக்கு அனுமதி ஒன்றை வழங்கியிருக்கிறது. ஆனால் முறையாக அந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்றால், பதில் இல்லை என்பதே. சரியாக விதிமுறைகளுக்கு அமைவாக அந்த நிலையம் நடாத்தப்படுகிறதா என்றும் தெரியவில்லை. இந்த விடயம் தொடர்பில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புசபையின் யாழ் பிராந்திய முகாமையாளரினால் 2019.04.18 ஆம் திகதி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரதிகள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. உரிய அதிகாரிகள் அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை.

**(11 ஆம் பக்கம் பார்க்கவும்)**

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

ஆசிரியர் பார்வை

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

# ஐந்தாவது ஆண்டில் நிமிர்வு

நிமிர்வு ஊடகம் தனது ஐந்தாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது.

தமிழ்மக்களின் தொலைநோக்க தேசிய அரசியலையும் சமூக மாற்றத்தையும் நோக்கிய பாதையில் தமிழ்மக்கள் சந்தித்து வரும் நெருக்கடிகள், பிரச்சினைகளை சுட்டிக் காட்டி அதனை தீர்த்து வைக்கும் வாய்ப்பு களையும் நாம் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றோம்.

2009 இல் முள்ளிவாய்க்காலில் இனப் படுகொலை இடம்பெற்று இன்று 12 ஆண்டு களை தொட்டு நிற்கின்றோம். ஆனால் இன்னமும் ஒரு சமூகமாக, இனமாக சிந்திப் பதில் செயற்படுவதில் தோற்றே நிற்கின்றோம்.

முதலாவது இதழின் ஆசிரியர் தலை யங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தோம். "இன்றைய சூழலில் தமிழ்மக்களின் நிமிர்வின் அவசியத்தை சொல்வதும் அந்நிமிர்வு எவ் வகையான ஜனநாயக வழிமுறைகள் ஊடாக அடையப்படலாமெனவும், அந்நிமிர்வு எப்படி பலமானதாக இருக்க வேண்டுமெனவும் அதன் சாதக பாதக விளைவுகளை ஆராய்ந்து அதில் பாதகமான விடயங்களை களைவதற்கு என்ன செய்யலாம் என்பதனை ஆராய்தலுமே இவ்வூடகத்தை தொடங்கியதன் நோக்கம்." எனவும் குறிப்பிட்டிருந்தோம்.

உண்மையில் கடந்த நான்கு ஆண்டு களில் தமிழ் மக்களுக்கான அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி, இயற்கைவழி சார்ந்து பல்வேறு விடயங்களை நிமிர்வு இதழ் களிலும், நிமிர்வு காணொலி ஊடாகவும் வெளிக்கொண்டு வந்திருக்கின்றோம். இவை மக்கள் மத்தியில் பேசுபொருளாக இருந் ததைக் காணக் கூடியதாக இருந்தது.

அதே போல் எங்களின் பக்கமுள்ள நியாயங்களையும், பேரினவாத சிங்கள அரசு அம்மக்கள் மத்தியில் செய்யும் பொய் பிரச்சாரங்களையும் முறியடிக்கும் தேவையும் எமக்கு உள்ளது. அதற்காக சிங்கள முற் போக்கு சக்திகளுடனும் நிமிர்வு நட்புணர் வுடன் இயங்கி வருகிறது. இங்குள்ள பல்வேறு விடயங்களையும் சிங்களத்தில் மொழி பெயர்ப்பதற்கும், சிங்களத்தில் உள்ள பல விடயங்களை தமிழில் மொழிபெயர்ப் பதற்கும் சுயாதீனமான மொழிபெயர்ப்பு பிரிவு ஒன்றினை கட்டமைப்பதும் காலத்தின் கட்டாயமாகும்.

ஒரு சமூகமாக, இனமாக சிந்தித்து எமது அரசியல் மற்றும் பொருளாதார விடுதலைக் கான முன்னெடுப்புக்களை எவ்வாறு செய்யலாம் என்பதற்கான ஆலோசனைக் களமாகவும் விவாதக்களமாகவும் நிமிர்வு தொடர்ந்து செயற்படும்.

தொடர்ந்தும் வாசகர்களின் பேராதர வோடு பயணிப்போம்.

- செ. கிரிசாந் -

**நிமிர்வு இதழ் தொடர்பிலான தங்களின் காத்திரமான விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் எங்களுக்கு எழுதி அனுப்பலாம். மேலும், வேறெங்கும் பிரசுரமாகாத தங்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாடு சார்ந்த கட்டுரைகளையும் அனுப்பி வைக்கலாம். தரமானவை பிரசுரிக்கப்படும்.**

**—ஆசிரியர்—**

## நிமிர்வு வாசகர்களே

தொடர்புகளுக்கு...

**தபால் முகவரி:**
**தமிழ் ஊடகத் திரட்டு,**
**லக்சுமி கட்டிடம்,**
**ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,**
**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்**
**தொ.பே.இல : 021 223 2121**
மின்னஞ்சல் முகவரி: nimirvueditor@gmail.com



# ஈழத்தமிழரின் உரிமைப்போரில் ஐநா மனித உரிமைகள் பேரவை

-துருவன்-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த ஒரு தசாப்த காலமாக இலங்கை விவகாரம் விவாதிக்கப்பட்டு வருகிறது. வருடா வருடம் மாசி – பங்குனி மாதங்களில் ஜெனீவா பரபரப்பு எம் எல்லோரையும் தொற்றிக் கொண்டு பின் படிப்படியாக நீர்த்துப் போவது இன்று வரை தொடர்ச்சியாக நடந்து வருகிறது. ஜெனீவாவை ஏதோ பெரும் தீர்ப்புக்கான களம் எனத் தான் முதலில் எம் அரசியல் தலைமைகளும், தமிழ் மக்களும் நம்பினார்கள். இதனாற் தான் ஜெனீவா காலப் பகுதியில் தமிழ் அரசியல் தலைமைகள் ஜெனீவாவுக்கு படையெடுப்பது வழமை.

ஆனால், முதலில் தமிழ்மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பு எழுந்து பின் அணைந்து போவது தொடர்கதையாகி வருகிறது. அரசற்ற தேசமாகிய தமிழர்தரப்பு தாங்கள் ஒருங்கிணைவுடன் செயலாற்ற முடியாமல் இன்று வரை இருந்து வருகிறது. அரசுடைய தேசமான சிறீலங்காவுக்கு சாதகமாக தான் உலக நாடுகள் இன்றும் செயற்பட்டு வருகின்றன. மேற்குலகு சிறீலங்கா அரசை வழிக்கு கொண்டு வர மட்டுமே இலங்கைத் தமிழர் விவகாரத்தின் சுருதியைக் கூட்டி குறைத்து ஜெனீவாவில் பயன்படுத்தி வருகின்றது. இதுவரை ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் இலங்கை விவகாரம் சார்ந்து ஏழு தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. தொடர்ச்சியாக காலநீடிப்புகளும் வழங்கப்பட்டு வந்தன. கடந்த கால நீடிப்புகளுக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பும் துணை போனது. கால நீடிப்புகள் வெறும் இழுத்தடிப்புகளாகவே கடந்தன.

பன்னாட்டு சமூகம் வழங்கிய நிலைமாறுகால நீதி தொடர்பில் 2016 இல் பல்வேறு கருத்தரங்குகள் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களால் நடாத்தப்பட்டன. அப்படி ஒரு கருத்தரங்கில் நிலைமாறுகாலநீதி தொடர்பில் ஒரே வரியில் பதிலளிக்குமாறு கூறப்பட்டது. அதற்கு அங்கிருந்த ஊடகவியலாளர் ஒருவர் 'நீர்த்துப்போகச் செய்தல்' என பதிலளித்திருந்தார். அதனைக் கேட்டு வளவாளரும் கொடுப்புக்குள் சிரித்தார். பன்னாட்டு சமூகம் இலங்கைக்கு தொடர்ச்சியாக கால நீடிப்புக்களை வழங்கி தமிழ் மக்களுக்கு நடந்த இனப்படுகொலைக்கான நீதியை நீர்த்துப் போகச் செய்து வருகிறது.

இலங்கையில் நடந்த தமிழின விடுதலைப் போரை பயங்கரவாத போராக சித்தரித்த பன்னாட்டு சமூகம், போர் முடிவடைந்து 12 ஆண்டுகளின் பின்னரும் இலங்கை அரசின் தமிழ்மக்கள் மீதான முடிவில்லாப் போரைக் கண்டும் காணாதது போல் இருக்கின்றது. இனவழிப்பு இன்றும் இலங்கைத் தீவில் தொடர்கதையாகி வருகிறது. நடந்த இனவழிப்புக்கு ஒரு புறம் தமிழினம் நீதி கேட்டு நிற்கிறது. மறுபுறம் தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்புகள், பண்பாட்டு அழிப்புகள் தொடர்ந்து வருகின்றன.

தொடரும் இனவழிப்பிலிருந்து தமிழினத்தை பாதுகாப்பதற்கான எந்தப் பொறிமுறையும் இங்கே இல்லாமல் உள்ளது. இதனை தட்டிக் கேட்கக் கூட சர்வதேசமும் ஐநா போன்ற உயரிய மனித உரிமை சார்ந்த அமைப்புகளும் வக்கற்று உள்ளன.

அமெரிக்காவில் செயற்படும் ஓக்லான்ட் நிறுவனத்தினரால் "இலங்கையில் தமிழர்களின் நிலங்கள், வாழ்வு, அடையாளம் என்பவற்றை அழித்த முடிவற்ற யுத்தம்" எனும் தலைப்பிலான அறிக்கை ஒன்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. அதில் இன்றும் தொடரும் முடிவில்லா போர் தொடர்பில் பல்வேறு விடயங்களும் ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையிலிருந்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு தமிழினப் படுகொலை விவகாரத்தை பாரப்படுத்துமாறு கேட்ட தமிழ் மக்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவே தெரிகிறது. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான தகவல் திரட்டும் செயல் பாடொன்றை மனித உரிமைகள் பேரவையின் கீழ் முன்னெடுப்பதற்கான ஏற்பாடொன்றை பிரேரணை உள்வாங்கியிருக்கிறது.

அந்த வகையில் இம்முறை நடக்கும் மாநாடு தமிழ் மக்களுக்கு ஓர் இம்மியளவு சாதகமானது எனலாம். எது எவ்வாறாகினும் பன்னாட்டு சமூக அபிப்பிராயம் என்பது இழுத்தவுடன் திரும்பும் அளவுக்கு சிறிய ஓடம் போன்றது அல்ல. அது பாரிய சரக்குக் கப்பல் போன்றது. அது திசை திரும்ப பாரிய சக்தியும் கூடிய நேரமும் எடுக்கும். இனப்படுகொலை நடந்த ஏனைய நாடுகளின் உதாரணங்களை நோக்கினால் பல நாடுகளில் இனப்படுகொலை விசாரணைகள் தொடங்க பல ஆண்டுகள் சென்றுள்ளன.

அதேவேளை ஐநா மனித உரிமைகள் மாநாட்டில் எமது கோரிக்கைகள் உலகநாடுகளின் அரசுகளை நோக்கியது மட்டுமல்ல. அது ஒட்டுமொத்த மனித குலத்தை நோக்கி நாம் முன்வைப்பது. அந்த மாநாட்டை ஒட்டி பல்வேறு களங்களிலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் உலகெங்கிலும் உள்ள முற்போக்கு சக்திகளுடன் நாம் அளவளாவ சந்தர்ப்பம் கிடைக்கிறது. அவர்களுக்கு எமது பிரச்சனைகளை சொல்லி எம்பக்கம் வெல்ல வாய்ப்பு கிடைக்கிறது.

சர்வதேச ஊடகங்களில் எமது பிரச்சனை பேசுபொருளாக இருக்கிறது. முக்கியமான சர்வதேச அரசுகள் நீதிக்கான எமது போராட்டம் 'நீர்த்துப் போவதையே' விரும்புகின்றன. ஆனால் அவ்வாறு

**"பன்னாட்டு சமூக அபிப்பிராயம் என்பது இழுத்தவுடன் திரும்பும் அளவுக்கு சிறிய ஓடம் போன்றது அல்ல. அது பாரிய சரக்குக் கப்பல் போன்றது. அது திசை திரும்ப பாரிய சக்தியும் கூடிய நேரமும் எடுக்கும். இனப்படுகொலை நடந்த ஏனைய நாடுகளின் உதாரணங்களை நோக்கினால் பல நாடுகளில் இனப்படுகொலை விசாரணை கள் தொடங்க பல ஆண்டுகள் சென்றுள்ளன"**

நடக்காமலிருக்க மனித உரிமைகள் பேரவை ஒரு காப்பரணாக இருக்கிறது. 'இந்தக் களத்தை தொடர்ந்து பயன்படுத்தும் அதேவேளை இதனூடாக எமக்கு நீதி கிடைக்கும் என்ற மாயையிலிருந்து விடுபட வேண்டும். அந்தத் தெளிவுடன் ஐநா மனித உரிமைப் பேரவையில் நாம் தொடர்ந்தும் பங்குபற்ற வேண்டும்' என்று கலாநிதி கு. குருபரன் பங்குனி 1 இல் இலண்டன் UCL பல்கலைக்கழகம் நடத்திய கருத்தரங்கு ஒன்றில் தெரிவித்தார். இம்முறை கூட்டத் தொடரை முன்னிட்டு தமிழ்த்தேசியகட்சிகள் எல்லாம் ஒரே குரலில் பேசியிருக்கின்றன. அவர்கள் இணைந்து தமது கோரிக்கைகளை முன்வைத்து கடிதம் சமர்ப்பித்து இருப்பது ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையாகும்.

கூட்டத்தொடர் சமயத்தில் கவனயீர்ப்புக்காக நடத்தப்பட்ட 'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை' தமிழ்பேசும் மக்களை கட்சி வேறுபாடுகளைத் தாண்டி ஒன்றிணைய வைத்தது. நாங்கள் ஒரு தேசமாக உணர, சிந்திக்க, செயற்பட ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஆகவே சர்வதேசம் எங்களுக்கு எல்லாத்தையும் தந்துவிடும் என்ற மாயைக்குள் இருந்து விலகி எமக்கு உரியதை பெற்றுக் கொள்ள நாம் தான் சாதகமாக சூழலை உருவாக்க வேண்டும் என்ற தெளிவுடன் நகர்வோம். அதற்காக ஒரு தேசமாக உணர, சிந்திக்க, செயற்பட தொடங்குவோம்.



# குருந்தனூர் தொல்லியல் தடயங்கள்: ஓர் பார்வை

நெடுங்கேணி சானுஜன், வரலாற்றுத் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

இலங்கையின் வடக்கே முல்லைத்தீவு மாவட்டத்தில் குமுழமுனை பிரதேசம் பல்வேறு வரலாறுகள், பாரம்பரியங்கள், மரபுகள், தொல்லியல் எச்சங்களை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இந்த குமுழமுனைக் கிராமமானது இயற்கை அழகு சூழ்ந்த வளமான கிராமமாகக் காணப்படுகின்றது. இக்கிராமத்திலிருந்து 3.5 மைல் தொலைவில் தண்ணிமுறிப்பு குளத்துக்கு இடப்பக்கமாகவும் புதுக்கண்டம் வயல் வெளி முடிவாகவும் குமுழமுனைக் கிராமத்தின் எல்லையாகவும் அமைந்த இடம் தான் குருந்தமலை. இன்று மருவி குருந்தூர்மலை ஆகிவிட்டது. குருந்தமரம் எனும் ஒருவகை மரம் அதிகளவில் இப்பகுதியில் காணப்பட்டமையால் காரணப் பெயராக இப்பெயர் அமைந்துள்ளது. இங்கு பழமை வாய்ந்த சிவாலயம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் காலத்தில் நாகர் குல மன்னர்களின் செல்வாக்கு களனி, நாகதீபம் போன்ற பகுதிகளில் இடம்பெற்றதைப் போன்று முல்லைத்தீவு மாவட்டத்திலும் அவர்களின் செல்வாக்கு இடம்பெற்றுள்ளதை ஆய்வுகள் மூலம் அறியலாம்.

1982 ஆம் ஆண்டு பேராசிரியர் சி.பத்மநாதன் குருந்தனூர் மலைக்குச் சென்று ஆலயச் சிதைவுகளைப் பார்வையிட்ட போது அங்கு ஓர் கற் தூணில் காணப்பட்ட பிராமி எழுத்தினை மொழி பெயர்ப்பு செய்தார். அதில் 'வேள்நாகன் மகன் வேள் கண்ணன்' எனக் குறிபிடப்பட்டுள்ளதாகப் பதிவு செய்தார். மேலும் அண்மையில் குருந்தனூரில் மீட்கப்பட்ட சிவலிங்கம் 2300 ஆண்டுகளிற்கு முற்பட்டது என்பதை சின்னத்தில் உள்ள தமிழ் பிராமி வரிவடிவ எழுத்துக்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன என்று தெரிவித்துள்ளார். இணையத்தளமொன்றிற்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்தமையானது: 'குருந்தூர் மலையிலுள்ள இப்பொழுது பேசப்படுகின்ற சின்னங்கள் சிலர் பல்லவர் காலத்துக்குரியன என்று சொல்கின்றனர். பல்லவர் காலத்துக்கும் இந்தச் சின்னங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இவை அந்தக் காலத்துக்கு மிக முற்பட்டனவாகும். அங்கு செங்கற்களால் அமைக்கப்பட்ட ஒரு சிறிய கட்டிடத்தின் இடிபாடுகள் தெளிவாகத் தெரிகின்றன. பார்ப்பவர்கள் எவருக்கும் இது புலனாகும். அந்தக் கட்டடத்தினுள் சற்று முன்புறமாக ஒரு வெள்ளைக் கல்லில் அமைந்த ஒரு உருவம் தெரிகிறது. அதில் பௌத்த படிமம் போல எதுவும் காணப்படவில்லை.'

அவர் மேலும் தெரிவிக்கையில், 'ஆதி காலத்து தொல்பொருள் சின்னங்களில் அனேகமானவை நாகர்களோடு தொடர்புடையவையாகும். நாகர்கள் வழிபட்ட சிவலிங்க வடிவங்கள் பனங்காமம் தொடக்கம் ஓமந்தை போன்ற இடங்களிலே பெரு மளவிலே காணப்படுகின்றன. இங்கே காணப்படுவது சிவலிங்க வடிவம் என்று கொள்வது சாலவும் பொருந்தும். இதைத்தான் வேறு ஆய்வாளர்களும் சொல்லியுள்ளார்கள். அது சிறிய கட்டிடத்தில் அமைந்திருப்பது இந்தக் கருத்தை வலியுறுத்து கிறது. அதில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக் கின்றன. நாகர்களுடைய கடவுள் பெயர் அதிலே காணப்படுகின்றது. அந்த லிங்கத்திலே 'மணி நாகன்' என்ற பெயர் தெளிவாகத் தெரிகின்றது. அது மட்டு மன்றி 'வேள் நாகன்' என்ற பெயரும் அதிலே காணப்படுகின்றது.

வழமையாக கடவுள் சின்னங்களில் கடவுள் பெயரை எழுதுவதோடு அதை தாபனம் பண்ணிய வர்கள் அல்லது நன்கொடை செய்பவர்களுடைய பெயரை எழுதுவது வழமை. நாகர்களுடைய வழமைப்படி வேள்நாகன் என்று தான் அது எழுதப் பட்டிருக்கிறது. வழிபாட்டுச் சின்னங்கள் எல்லா வற்றிலும் அவர்கள் கடவுள் பெயர்களை தமிழ்ப் பிராமி வடிவங்களிலே பொறித்தார்கள். சிவலிங்கம், புத்த படிமம், நந்தி, மயூரம், பூசகம் முதலிய எல்லா வற்றிலும் இந்தக் கடவுள் பெயர் காணப்படும். சின்னத்தின் அடிப்படையிலே தான் அது எந்த வழி பாட்டு மரபுக்குரியது என்பது நிர்ணயிக்கப்படும்.

**"ஆதி காலத்து தொல்பொருள் சின்னங்களில் அனேகமானவை நாகர்களோடு தொடர்புடையவை யாகும். நாகர்கள் வழிபட்ட சிவலிங்க வடிவங்கள் பனங்காமம் தொடக்கம் ஓமந்தை போன்ற இடங்களிலே பெரு மளவிலே காணப்படுகின்றன. இங்கே காணப்படுவது சிவலிங்க வடிவம் என்று கொள்வது சாலவும் பொருந்தும். இதைத்தான் வேறு ஆய்வாளர்களும் சொல்லியுள்ளார்கள்"**

இங்கு காணப்படுவது சிவலிங்கம். அதிலே காணப்படுகின்ற எழுத்துக்களைக் கொண்டு பார்க்கு மிடத்து இது கி.மு. 3 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தாகக் கொள்ளத்தக்கது. அச்சமயங்களில் இலங்கை யில் வட்டெழுத்து மரபு பரவியிருக்காததனாலே தமிழ்ப் பிராமி வரி வடிவங்கள் தொடர்ந்தும் சில நூற்றாண்டுகளாக நிலைபெற்றிருந்திருக்கின்றன. ஆனால் இந்த வடிவத்தைப் பொறுத்தவரையில் இது சர்ச்சைக்குரிய வடிவம் அன்று. உறுதியாகச் சொல்லக் கூடியது என்னவென்றால் இது ஒரு பழங்காலத்து லிங்க உருவம். லிங்க உருவத்தின் ஆரம்பகால வடி வமைப்பினை பிரதிபலிக்கின்ற வடிவம். நாகர் களின் கடவுள் பெயர் எழுதப்பட்டுள்ள வடிவம். சைவ சமய சின்னமாக அது அமைகின்றது.' எனக் குறிப் பிட்டுள்ளார்.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் வன்னியில் அதிகளவில் இந்துக்கோவில்கள் அழிக்கப்பட்டன. ஒல்லாந்தர் ஆட்சியாளன் கப்டன் நாகொல்லு வன்னி நிர்வாகத்தை நேரடியாக நடத்தினான். இவனது காலத்தில் வன்னி பிரதேசத்திலிருந்த அனைத்து சைவ கோவில்களும் இடிக்கப்பட்டன. அதில் ஒன்று தான் குருந்தனூர் சிவாலயம். இதன் கோயில் எச்சங்கள் பலவும் மலையின் உச்சியில் காணப்படுகின்றன.

குருந்தனூர் மலைப் பகுதியில் ஆங்கிலேய ஆய்வாளர் எச்.சி.பி.பெல் (H.C.P. Bell) அவர்கள் ஆய்வுகள் மேற்கொண்டு அது பற்றிய விபரங்களை 1905 ஆம் ஆண்டு இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தின் 'Archaelogical Survey of Ceylon-Annual Report -1905' எனும் அறிக்கையில் ஆவணப் படுத்தியுள்ளார். அவ்வறிக்கையில் 'குருந்தன் குளத் தின் மேற்குப் பக்கத்தில், குருந்தூர் மலையின் தெற் குப்பக்க சரிவில் குருந்தன் ஊரெனும் நகரம் புதைந்து கிடக்கிறது. இப்பகுதி முழுவதும் அடர்ந்த காடாகக் காணப்படும் அதேவேளை, இப்பகுதியில் இதுவரை அகழ்வாராய்ச்சிகள் எதுவும் மேற்கொள்ளப்பட வில்லை.' எனவும் தெரிவித்தார்.

இவ்விடத்தில் மூன்று பக்கங்களும் மதிற் சுவரினாலும், ஒரு பக்கம் குளத்தின் அணையா லும் சூழப்பட்ட சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் கட்டட இடிபாடுகள் காணப்படுகின்றன. இங்கு கற் தூண்களும், ஏராளமான சிறிய கட்டிடங்களின் சிதைவுகளும், சில பெரிய கட்டிடங்களின் சிதைவு களும் காணப்படுகின்றன. இவற்றில் சிறிய தூபி

ஒன்று உள்ளது. இதன் அருகில் பல கற்தூண்களும், அதிகளவில் சிதைவடைந்த நந்தி ஒன்றும் காணப் படுகிறது. இது அநேகமாக ஒரு சைவக் கோயிலாக இருக்க வேண்டும். இவ்விடத்தில் மூன்று அடி விட்ட முள்ள பெரிய ஆவுடையார் ஒன்று காணப்படுகிறது. இதன் நடுவில் ஒரு அடி விட்டமுள்ள குழி உள்ளது. இதன் அருகில் செங்கற்களினால் கட்டப்பட்ட நான்கு அடி ஆறு அங்குலம் அகலமுள்ள கிணறு ஒன்றும் காணப்படுகிறது. 25 அடி ஆழமுள்ள இக்கிணற்றில் 20 அடி வரை செங்கற் கட்டுமானமும், அதன் கீழே 5 அடிக்குப் பாறையில் செதுக்கப்பட்ட கிணறும் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு கல்லில் செதுக்கப்பட்ட ஒரு சிற்பம் உள்ளது. இரண்டு அடி ஆறு அங்குல உயரம், ஒரு அடி ஒன்பது அங்குல அகலம் கொண்ட இது உட்கார்ந்து வணங்கிய வண்ணம் காணப்படும் மனித உருவமாகும். இங்கு பல நாக காவற்கற்களும் காணப்படுகின்றன.

இங்குள்ள செங்கல் கட்டடம் ஒரு இந்துக் கோயிலாகும். இது இடிந்து விழுந்து மேடாகக் காணப்படுகிறது. மொத்தத்தில் இது பௌத்த, இந்து சிதைவுகளைக் கொண்ட பிரதேசமாகுமெனக் குறிப்பிட்டுள்ளார். குருந்தனூர் மலைப் பகுதியில் ஆய்வுகள் மேற்கொண்ட ஆங்கிலேய ஆய்வாளர் ஜே.பி.லூயிஸ் (J.P. Lewis) அவர்கள் 1895 ஆம் ஆண்டு தனது 'Manual of the Vanni Districts' எனும் நூலில் அது பற்றிய விபரங்களை எழுதியுள்ளார்.

அந்நூலில் குருந்தனூர் மலையில் தலை உடைந்த நிலையில் ஒரு நந்தியின் சிலை இருந்த தாகவும், வணங்கிய நிலையில் ஒருவர் இருக்கும் சிற்பமும் இருந்ததாகவும், இவை தமிழரின் படை யெடுப்பின் பின் கட்டப்பட்ட ஓர் இந்துக் கோயிலுக் குரிய சின்னங்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இங்கு ஐந்து தலை நாகத்தின் கற்சிலையுடன் கூடிய ஒரு பண்டைய கோயிலும் இருந்ததாகவும் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இக்கோயில் பற்றி கலாமணி சி.தெய்வ நாயகம் பிள்ளை 1982 இல் வரலாற்று பேராசிரியர் களான இந்திரபாலா, ரகுபதி, சிற்றம்பலம் போன்றோருடன் அந்த மலைக்கு சென்றதாகவும் இது மிகவும் வனப்புடன் காணப்பட்டதாகவும் மலையின் அடியிலிருந்து உச்சிவரை கருங்கற்படிகள் காணப் பட்டதாகவும் மலையின் உச்சியில் அழிவுற்ற சிவன் கோவிலுக்கான கற்தூண், கோமுகி, கருங்கற்

**"இந்த குருந்தலூர் என்பதே தொன்மைமையான தமிழ் பெயர். அதுவே ஒரு தொன்மையான ஆதாரமாகக் காணப்படுகின்றது. இந்த குருந்தலூரில் பௌத்த மதம் பரவுவதற்கு முன்னர் குருந்தலூ ரிலும் அதன் சுற்றாடலிலும் ஆதி இரும்பு காலத்து பெருங்கற்காலப் பண்பாடு இருந்துள்ளது"**

பலகையிலான பீடங்கள் போன்ற எச்சங்கள் காணப்பட்டதாகவும் கூறுகின்றார்.

யாழ் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை சிரேஷ்ட பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்கள் அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர் காணல் ஒன்றில் பின்வருமாறு கூறியுள்ளார். 'வன்னிப் பிரதேசத்தில் உள்ள வரலாற்று பழைமை வாய்ந்த முக்கிய வரலாற்று மையங்களில் குருந்தலூர் (குருந்தூர்) ஒன்றாகும். பாளி இலக்கியங்களில் இந்த இடம் குருந்தகம என்றும் தமிழில் இது குருந்தலூர் என்றும் அழைக்கப்படுகின்றது.

இந்த குருந்தலூர் என்பதே தொன்மையான தமிழ் பெயர். அதுவே ஒரு தொன்மையான ஆதார மாகக் காணப்படுகின்றது. இந்த குருந்தலூரில் பௌத்த மதம் பரவுவதற்கு முன்னர் குருந்தலூ ரிலும் அதன் சுற்றாடலிலும் ஆதி இரும்பு காலத்து பெருங்கற்காலப் பண்பாடு இருந்துள்ளது. ஆகவே அந்தப் பண்பாட்டு மக்களில் ஒரு பிரிவினர் பௌத்த மதம் பரவிய பொழுது அந்த மதத்தையும் தழுவி யிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்த குருந்தலூர் கி.பி 13 ஆம் நூற்றாண்டில் கலிங்கமாகன் சாகவனுடைய ஆட்சியில் மிக முக்கிய ஒரு நகராக இருந்ததை சூளவம்சமும், இராஜா வெலிய என்ற சிங்கள இலக்கியமும் குறிப்பிடு கின்றன. எனவே இந்த குருந்தலூரில் கி.பி 13 நூற் றாண்டுக்கு முன்பிருந்தே தமிழர்கள் வாழ்ந்தார் கள் என்பதற்கு பாளி, சிங்கள இலக்கியங்களில் ஆதாரங்கள் உள்ளன. ஆகவே இந்த குருந்தலூர்

அகழ்வாய்வில் கிடைக்கும் தொல்பொருள் சான்று களை வைத்துக் கொண்டு பாளி, சிங்கள இலக்கி யங்கள் கூறுகின்றவற்றின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தலாம் எனவும் தெரிவித்தார்.

1982 இல் குருந்தனூர் கோயில் இலங்கை இந்துக்கலாச்சாரத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இடப்பெயர்வின் முன் வன்னி வாழ் மக்களின் சுற்றுலாத் தளமாகவும் இது விளங்கியது. ஆனால் இன்று போரின் பின் ஆலயத்தின் சிதைவுகள் மலையில் சிதறி காணப்படுவதுடன் ஆலயத்தின் தொன்மங்கள் சிலவும் திருடப்பட்டுள்ளன. அதாவது ஆலயத்தின் உச்சியில் குழிகள் தோண்டப்பட்டு புதை யல்கள் எடுக்கப்பட்டுள்ளதை அறியக் கூடியதாக உள்ளது. இவ்வாறு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங் கள், தொல்பொருட்கள் அழிந்து வருவது வேதனைக் குரிய விடயமாகும்.

அண்மையில் குருந்தூர் மலை பகுதியில் மக்களது பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் கடந்த 18.01.2021 அன்று தொல் பொருள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரம நாயக்க தலைமையில் அகழ்வாராய்ச்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சுமார் ஒரு வார காலத்திற்கு பின்னர் அப்பகுதிக்கு வருகை தந்த அகழ்வாராய்ச்சியாளர்கள் இராணுவத்தினரையும் இணைத்து தொடர்ச்சியாக அகழ்வாராய்ச்சி பணி களில் ஈடுபட்டு வருகின்றனர்.

குருந்தனூரில் அகழாய்வுப் பணிகள் ஆரம்பிக் கப்பட்டதனைத் தொடர்ந்து சில நாட்களில் ஸ்ரீஜெய வர்த்தனபுர பல்கலைகழக பௌத்தபீட விரிவுரை யாளர் பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர், பௌத்த மதகுருமார்கள், படை அதிகாரிகளுடன் சென்று அதனைப் பார்வையிட்டார். பின்னர் ஊடகங் களிடம் கருத்து தெரிவித்த அபயதிஸ்ஸ தேரர் 'மகாவம்சம் மற்றும் எமது இதிகாசங்களில் சொல்லப்பட்ட குருந்து விகாரை குருந்தாசோக விகாரை ஆகியவற்றை பார்க்கவே வந்துள்ளோம். அங்கு ஒரு விகாரை இருந்தது. பின்னர் அழிவடைந்து விட்டது. அந்த இடங்களில் அதன் சிதைவுகள் உள்ளன. சந்திரவட்டக்கல் போன்ற விகாரைக்குரிய சின்னங் கள் அங்கு சிதைவடைந்த நிலையில் உள்ளன. சிங்களத்தில் உள்ள எட்டு இதிகாசங்களில் இரண்டு பாளி மொழியில் உள்ளன. ஏனையவை சிங்களத் தில் உள்ளன. இதிலொன்று குருந்தி இதிகாசம் ஆகும்.

**"இடப்பெயர்வின் முன் வன்னி வாழ் மக்களின் சுற்றுலாத் தளமாகவும் இது விளங்கியது. ஆனால் இன்று போரின் பின் ஆலயத்தின் சிதைவுகள் மலையில் சிதறி காணப்படுவதுடன் ஆலயத்தின் தொன்மங்கள் சிலவும் திருடப்பட்டுள்ளன. அதாவது ஆலயத்தின் உச்சியில் குழிகள் தோண்டப்பட்டு புதையல்கள் எடுக்கப் பட்டுள்ளதை அறியக் கூடியதாக உள்ளது. இவ்வாறு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்கள், தொல்பொருட்கள் அழிந்து வருவது வேதனைக்குரிய விடயமாகும்"**

இது இந்த இடத்தில் வைத்தே எழுதப்பட்டது. குருந்த காசரியோ என்ற விகாராதிபதியினாலேயே இந்த இடம் உருவானது. இலங்கையில் எல்லா சமூகமும் வர்க்க பேதமின்றி அவரவர்கள் தத்தமது இடங்களை உரிமை கொண்டாட முடியும். இந்த இடம் இலங்கை யின் முக்கியமான இடம். அதனாலேயே இவ்விடத் தைப் பார்வையிட வந்தோம்' எனக் கூறினார்.

குறித்த குருந்தூர் மலை பகுதியிலே லிங்க வழிபாடுகள் இடம்பெற்றமைக்கான பல்வேறு ஆதாரங்கள் இருப்பதாக குறித்த பகுதியில் பல மூத்த வர்கள் கருத்து தெரிவித்திருந்தனர். இதனை உறுதிப் படுத்தும் முகமாக குருந்தூர்மலைப் பகுதியில் இடம் பெறும் அகழ்வாராய்ச்சிப் பணிகளின் போது ஆதி லிங்கமெனக் கருதப்படும் லிங்க உருவத்தை ஒத்த சிலையொன்று வெளித் தோன்றியுள்ளது. இது தொடர்பாக 10.02.2021 சிங்களப் பத்திரிகைகள் வெளியிட்ட செய்தியில் குருந்தனூர் அகழாய்வில் கிடைக்கப்பெற்ற சிவலிங்கத்தினை ஒத்த எட்டு பக்கங்களைக் கொண்ட தூணினை பௌத்த தூபியின் உச்சியில் வைக்கப்படும் "யூப்ப கல" என்னும் தூண் என்றும், அத்தொல்லியல் தடயங்கள் கி.பி 1 அல்லது கி.பி 2 நூற்றாண்டு காலத்தை சேர்ந்தவை எனவும் சொல்லின.

அப்படியாயின், குருந்தனூரில் வாழ்ந்த மக்கள் சைவ, பௌத்த வழிபாட்டினை மேற்கொண்டு இருந் தார்கள் என்று தான் எண்ணலாம். இந்தக் காரணத் தால், தமிழர்கள் தான் குறித்த இந்த இடத்தில் வாழ்ந் திருக்கின்றார்கள் என்று தான் ஆதாரம் கொள்ள முடியும். ஏனெனில் கி.மு ஏழாம் ஆம் நூற்றாண்டில் கந்தரோடை, திருகோணமலை, ஆகிய இடங்களில்

கண்டுடெடுக்கப்பட்ட தொல்பொருட் தடயங்கள் தமிழர்களின் வரலாற்றைச் சொல்வதாகவே அமைந் திருக்கின்றன.

அப்படியாயின் குறித்த இந்த இடத்தில் வாழ்ந்த மக்கள் தொகுதியும் தமிழர்களின் வழிவந்த மக்களே! அந்த மக்கள் கூட்டமே பௌத்தத்தையும் தமது நெறிமுறையின் ஒரு அம்சமாக கைக்கொண்டது. அந்தக் காலங்களில் மகாஞான பௌத்தத்தை தமிழர் களே வளர்த்தார்கள். மகாஞான பௌத்தத்தை தமிழர்களும் தழுவி இருந்தார்கள். இதற்கு வட பகுதி களில் ஆங்காங்கே கண்டுபிடிக்கப்பட்ட புத்த சிலைகளின் நெற்றியில் பொட்டு உள்ளதை தொல்லி யல் வரலாற்று ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டு கின்றார்கள். இதற்கு உதாரணமாக வவுனியா விலுள்ள தொல்பொருள் அருங்காட்சியகத்தில் உள்ள புத்தர் சிலையின் நெற்றியில் பொட்டும், அதன் கை மற்றும் மார்பு பகுதிகளில் தமிழ் பிராமி எழுத் துக்கள் எழுதப்பட்டிருப்பதை இன்றும் ஆதாரப்படுத்த முடியும்.

சிங்கள பத்திரிகைகள் வெளியிட்ட “யூப்ப கல” சைவர்கள் வணங்கும் முழுமுதற் கடவுளான சிவனையே குறிக்கின்றது. இச்சிவலிங்க பீடத்தை எண்கோண இலிங்கம் என்றும் அழைப்பர். இதற்கு தாரா இலிங்கம் அல்லது பாணப்பட்டை இலிங்கம் என்ற பெயர்களும் உண்டு. குருந்தனூர் மலை பகுதி யில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டட இடிபாடுகள், சுடு மண் செங்கற்கள் ஆகியவை கிறிஸ்துவிற்கு முற் பட்ட காலத்திற்குரியவை. கிறிஸ்துவிற்கு முந்திய காலத்திற்குட்பட்ட சிவலிங்கங்கள் அனுராதபுரத் திலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் பல்லவர் மற்றும் சோழரின் ஆட்சி காலத்திற்கு காலம் இடம்பெற்று வந்ததை வரலாற்று நூல்களிலிருந்து அறியலாம். பொதுவாக கருங்கல்லில் சிவலிங்கம் செதுக்கும் முறையை அறிமுகம் செய்தவர்கள் பல்லவர்களே. இந்தப் பல்ல வர்கள் காலத்தில் சிவலிங்கத்திற்கு பல வடிவங்கள் இருந்தன. எண்கோண, முக்கோண, ஐங்கோண சிவலிங்கங்கள் செதுக்கப்பட்டன. உதாரணமாக தாரா இலிங்கம் எட்டு, பன்னிரண்டு, பதினாறு, கோணங் களில் அமைந்தவையாக செதுக்கப்பட்டது. தமிழகத் தின் பண்பாட்டியல் அம்சம் இலங்கையில் பரவியது அதிசயத்தக்கதல்ல.

“யூப்ப கல” என்பது சைவ சமயம் கூறும் எட்டுத் திக்கு பாலகர்களையும் அல்லது காவல் கணங்களையும் (தெய்வங்களையும்) குறிக்கும் ஒரு காவல் கல்லாகும். இத்தூண் பல்லவர் காலத்தில் சைவ ஆலயங்களில் இன்றைய கொடித்தம்பத்திற்குப் பதிலாக காவல் தூணாக நிறுத்தப்பட்டு இருந்தது. பல்லவர் காலத்தின் பின்னர் (அண்ணளவாக கி.பி 7 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்) இந்தக் காவல் கல், டகோபாவாவில் (மகாஞான பௌத்த துறவிகளின் சமாதி) உச்சியில் காவலுக்காக நிறுத்தப்படுகின்ற நீண்ட கற்தூண்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. குருந்தனூர் மலையில் தொடர்ந்தும் அகழாய்வு நடைபெற்று வருகின்றது. பொறுத்திருந்து பார்ப் போம் அன்று புதைக்கப்பட்ட தமிழரின் வரலாறுகள் என்றோ ஒரு நாள் வெளிக்கிளம்பும். அப்போது தமிழர் தான் ஈழத்தின் மூத்த குடிகள் என்று உலகம் ஒப்புக்கொள்ளும்!

---

**(03 ஆம் பக்க தொடர்ச்சி)**

ஆனால் இங்கு முளைத்திருக்கும் சுத்திகரிக்கப் பட்ட நீர்க்கடைகள் எந்த விதிமுறைகளும் இல்லா மல் நாளொன்றுக்கு பல்லாயிரக்கணக்கான நிலத்தடி நீரினை உறிஞ்சி லீட்டருக்கு 3 ரூபாய் தொடக்கம் 5 ரூபாய் வரை விற்பனை செய்கின்றன. நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் யாழ் அரச அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக பொது மக்களின் வீடு களில் குழாய்க்கிணறு அமைக்க மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் ஐஸ் தொழிற்சாலைகள், சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர்க்கடைகள், விவசாய நிலங்கள் என அனுமதி இல்லாமல் ஆழ்துளைக் கிணறுகள் பல அமைக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.


இப்படியே போனால் யாழ்ப்பாணக் கிணறுகள் முழுவதும் உவர் நீராகவே மாறிப் போகும். இனியாவது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

**குறிப்பு:**

**தண்ணீர் சுத்திகரிப்பு நிறுவனங்கள் தொடர்பாக இக்கட்டுரையில் உள்ள பல்வேறு விடயங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் பெறப்பட்டவை.**

# இனத்தை அழிக்க சீனா சொல்லித் தரும் பாடம்



ஜோன் சட்வேர்த் – BBC செய்திகள், பெய்ஜிங்
**(John Sudworth, BBC News, Beijing)**
பங்குனி 3, 2021 – தமிழாக்கம் – நிமிர்வு

சீன அரசின் இரகசியமான உயர்மட்ட ஆய்விலிருந்து சிஞ்ஜியாங்கில் உள்ள உய்குர்கள் மற்றும் பிற இன சிறுபான்மையினரை நூறாயிரக்கணக்கில் வீட்டிலிருந்து வெகு தொலைவில் உள்ள புதிய வேலைகளுக்கு அனுப்பும் சீனாவின் கொள்கை அவர்களின் இனச்செறிவைக் குறைக்க வழிவகுக்கிறது.

உயர்மட்ட அதிகாரிகளின் பார்வைக்காக தயாரிக்கப்பட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வறிக்கை தவறுதலாக வலைத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டு விட்டது. இந்த ஆய்வறிக்கையும், சீனா முழுவதும் உள்ள தொழிற்சாலைகளில் சேகரிக்கப்பட்ட தகவல்களும், சீனாவின் பிரச்சார அறிக்கைகளும் **BBC** ஆல் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரைக்கு ஆதாரங்களாக உள்ளன.

சீன அரசாங்கமோ இப்பிராந்தியத்தின் இனச்செறிவை மாற்ற முயற்சிப்பதாக சொல்லப்படும் குற்றச்சாட்டை மறுக்கிறது. இடமாற்றங்கள் மக்களின் வருமானத்தை உயர்த்தவும், நீண்ட கால கிராமப்புற வேலையின்மை மற்றும் வறுமையை போக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறது.

ஆனால் **BBC** ஆல் திரட்டப்பட்ட ஆதாரங்கள் அரசின் இக்கொள்கை, சமீபத்திய ஆண்டுகளில் சின்ஜியாங் முழுவதும் கட்டப்பட்ட "மறு கல்வி முகாம்கள்" போன்று மக்களை வற்புறுத்தலுக்கு உள்ளாக்கும் தன்மையுள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றன. மேலும் அவர்களின் வாழ்க்கை முறை மற்றும் சிந்தனைகளை மாற்றி சீனருடன் ஒன்றாக கலக்க வைக்கும் நோக்கத்துடன் இக்கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டி நிற்கின்றன.

இவ்வாறு வற்புறுத்தி அணிதிரட்டப்பட்ட மக்களைக் கொண்டு செய்யப்பட்ட பொருட்கள் எந்த அளவுக்கு உலக சந்தையில் கலந்துள்ளது என்பது பலரதும் அக்கறைக்கு உள்ளாகியுள்ளது. உய்குர்களின் உழைப்புக்கும் மேற்கு நாட்டு நிறுவனங்கள் இரண்டுக்கும் உள்ள தொடர்புகள் தொடர்பாக BBC ஆராய்ந்து வருகிறது.

சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி நடத்தும் ஊடகத்தில் ஒளிபரப்பப்பட்ட ஒரு காணொலி அறிக்கை, 4,000 கி.மீதூரத்தில் உள்ள அன்ஹுய் (Anhui) மாகாணத்தில் ஒரு கிராமத்து மக்களின் அன்றாட விவசாய வாழ்க்கையை காட்டுகின்றது. பின்னர் கிராம மையத்தில் அதிகாரிகள் குழுவொன்று ஒரு சிவப்பு விளம்பரப் பதாகையின் கீழ் அமர்ந்திருப்பதைக் காட்டுகிறது.

இரண்டு முழு நாட்கள் அவர்கள் அவ்வாறு காத்திருந்த போதும் கிராமத்திலிருந்து ஒரு நபர் கூட அங்கு பதிவு செய்ய முன் வரவில்லை. எனவே அதிகாரிகள் வீடு வீடாக செல்லத் தொடங்குகிறார்கள்.

அடுத்து வரும் காட்சிகள் சின்ஜியாங்கில் உள்ள உய்குர்கள், கசாக் மற்றும் பிற சிறுபான்மையினரை தொழிற்சாலை மற்றும் சிறுதொழில்

வேலைகளுக்கு மாற்றுவதற்கான சீனாவின் பாரிய நடவடிக்கையை காட்டும் முக்கியமான காட்சிகள். இது அவர்களின் வீடுகளிலிருந்து கணிசமான தூரத்தில் உள்ள இடங்களுக்கு அவர்களை மாற்றுவதை பெரும்பாலும் உள்ளடக்கியுள்ளது.

சீனாவின் இக்கொள்கை தீவிரமடையத் தொடங்கிய 2017 இல் ஒளிபரப்பப்பட்டிருந்தாலும் இந்தக் காணொலி சர்வதேச செய்தி அறிக்கையில் இதுவரை இடம்பெறவில்லை.

அதிகாரிகள் ஒரு தந்தையிடம் பேசுகிறார்கள். அவர் தனது மகள் புசாயனாப்பை தூர இடத்துக்கு அனுப்பத் தயங்குகிறார். “எங்கள் வாழ்க்கையை இங்கே நடத்த முடியும். எமது இயல்பான வாழ்க்கையை வாழ்வோம்.” என்று கெஞ்சுகிறார். அவர்கள் நேரடியாக 19 வயது புசாயனாப்பிடம் பேசுகிறார்கள். அவள் அங்கே தொடர்ந்து தங்கினால் விரைவில் திருமணம் செய்து கொள்வாள். அதன் பின் ஒரு போதும் வெளியேற முடியாது என்று அவளிடம் சொல்கிறார்கள். அவளை சிந்திக்குமாறு கேட்கிறார்கள்.

அரசாங்க அதிகாரிகள் மற்றும் அரசு தொலைக்காட்சி பத்திரிகையாளர்களின் தீவிர அழுத்தத்தின் மத்தியிலும் அவள் தலையை அசைத்து, ”நான் போக மாட்டேன்” என்று பதிலளித்தாள். ஆனாலும் அழுத்தம் தொடர்கிறது. இறுதியில் அழுதவாறே “மற்றவர்கள் சென்றால் நான் செல்வேன்,” என்று கூறுகிறாள்.

இறுதியில் புசாயனாப் போன்று “அணி திரட்டப்பட்ட” ஆட்கள் தாய்மார்களிடமிருந்து கண்ணீருடன் விடைபெறுவதாக காட்டி காணொலி முடிகிறது. அவர்கள் தங்கள் குடும்பத்தையும் கலாச்சாரத்தையும் விட்டு வெளியேறுகிறார்கள்.

மனித உரிமைகள் மற்றும் நவீன அடிமைத்துவம் என்பவற்றில் நிபுணரான பேராசிரியர் லாராமர்பி (Laura Murphy) இங்கிலாந்தின் ஷெஃபீல்ட் ஹலாம் (SheffieldHallam) பல்கலைக் கழகத்தில் பணிபுரிகிறார். இவர் 2004 மற்றும் 2005 இல் சின்ஜியாங்கில் வசித்து வந்தவர். அதன்பின்னர் பலதடவைகள் அங்கு சென்று வந்துள்ளார்.

“இந்த திட்டங்களில் மக்கள் தன்னார்வத்துடன் கலந்து வருகிறார்கள் என்று சீன அரசாங்கம் தொடர்ந்து கூறுகிறது. ஆனால் இது ஒரு வற்புறுத்தல் முறை என்பதையும் மக்கள் அதனை மறுதலிக்க அனுமதிக்கப்படுவதில்லை என்பதை இந்தக் காணொலி முற்றிலும் வெளிப்படுத்துகிறது.” என்று அவர் சொல்கிறார். “மக்களை வறுமையிலிருந்து உயர்த்துவது தான் நோக்கம் என்று விபரிக்கப்பட்டாலும், மக்களின் வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றுவதற்கும், குடும்பங்களை பிரிப்பதற்கும், மக்களைக் கலைப்பதற்கும், அவர்களின் மொழியை மாற்றுவதற்கும் ஒரு உந்துதல் இதன் பின்னால் இருக்கிறது. அவர்களின் கலாச்சாரம், குடும்ப கட்டமைப்புகளை சிதைவதனால் வறுமை குறைவதற்கு மாறாக அதிகரிக்கவே வாய்ப்புக்கள் உள்ளன.” என்று அவர் கூறுகிறார்.

2013 ஆம் ஆண்டில் பெய்ஜிங்கிலும், 2014 இல் குன்மிங் நகரத்திலும் பாதசாரிகள் மற்றும் பயணிகள் மீதான இரண்டு மிருகத்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இது உய்குர் இஸ்லாமியவாதிகள் மற்றும் பிரிவினைவாதிகளால் நடத்தப்பட்டதாக சீனா குற்றம் சாட்டியது. அன்றிலிருந்து சின்ஜியாங்கில் சீனாவின் அணுகுமுறையில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் காணலாம்.

அந்த மாற்றத்தில் முக்கியமானவை இந்த “மறு கல்வி முகாம்கள்” மற்றும் “வேலை வாய்ப்பு இடமாற்றங்கள்”. இவற்றினூடாக “பழைய” கலாச்சாரத்துக்கும் இஸ்லாமிய நம்பிக்கைக்கும் உள்ள விசுவாசத்திற்கு பதிலீடாக “நவீன” பொருள் முதல்வாத்துக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் உய்குர்களை மாற்றுவது.

சீனாவின் பெரும்பான்மையான ஹான் கலாச்சாரத்திற்குள் உய்குர்களை ஒருங்கிணைப்பதற்கான இந்த குறிக்கோள், மேலே குறிப்பிட்ட சீன ஆய்வறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. தொழிலாளர் இடமாற்றங்கள் “உய்குர் சிறுபான்மையினர் மீது செல்வாக்கு செலுத்துவதற்கும், அவர்களை சீனர்களுடன் ஒருங்கிணைப்பதற்கும் ஒரு முக்கியமான முறையாகும்” என்று சொல்கிறது. இந் நடவடிக்கை “அவர்களின் சிந்தனையில் மாற்றத்தை” கொண்டு வருவதாகவும் முடிவு செய்கிறது. உய்குர் மக்களை அவர்களின் இடங்களிலிருந்து அகற்றி அப்பிராந்தியத்தில் அல்லது பிற சீன மாகாணங்களில் உள்ள வேறு இடங்களுக்கு மாற்றம் செய்வது, “உய்குர் மக்கள் அடர்த்தியைக் குறைக்கிறது” என்று அது கூறுகிறது.

இந்த அறிக்கை மே 2018 இல் சின்ஜியாங்கின் ஹோடன் (Hotan) பிரிவில் நடத்தப்பட்ட கள ஆய்வுகளின் அடிப்படையில் தியான்ஜினில் (Tianjin) உள்ள நங்காய் (Nankai) பல்கலைக்கழக கல்வியாளர் குழுவால் எழுதப்பட்டது.

பல்கலைக்கழகத்தால் தவறுதலாக வலைத் தளத்தில் வெளிவிடப்பட்ட இவ்வறிக்கையை அங்கிருந்து நீக்கப்பட முன்னர் வெளிநாட்டிலிருந்த உய்கர் ஆராய்ச்சியாளர் ஒருவர் கண்டுபிடித்து தரவிறக்கம் செய்து விட்டார்.

வாஷிங்டனில் உள்ள கம்யூனிசத்துக்கு பலியானவர்களின் நினைவு அறக்கட்டளையின் அறிஞர் கலாநிதி அட்ரியன் சென்ஸ் (Dr.Adrian Zenz), இந்த அறிக்கையின் ஆங்கில மொழி பெயர்ப்பை உள்ளடக்கிய தனது சொந்த பகுப்பாய்வை எழுதியுள்ளார். "இது முன்னெப்போதும் இல்லாத வகையில், சின்ஜியாங்கின் அரசாங்கத்துடன் உயர் மட்ட தொடர்புகளுள்ள முன்னணி கல்வியாளர்கள் மற்றும் முன்னாள் அரசாங்க அதிகாரிகளால் எழுதப்பட்ட நம்பகத்தனமான அறிக்கை" என்று அவர் BBC பேட்டியில் கூறினார்.

"அவர்களது பூர்வீக பிரதேசத்தில் அதிகப்படியான மக்கள் தொகைச் செறிவைக்குறைப்பதற்காக, தொழிலாளர் இடமாற்றத்தை ஒருவழியாகப் பயன்படுத்துவது என்பதை ஒத்துக் கொள்வது என்பது இந்த அறிக்கையின் மிகவும் அதிர்ச்சியூட்டும் ஒப்புதல்." என்று தெரிவிக்கிறார். அவரது பகுப்பாய்வில், அமெரிக்க ஹோலோகாஸ்ட் நினைவு அருங்காட்சியக முன்னாள் மூத்த ஆலோசகரான எரின் ஃபாரெல் ரோசன் பெர்க்கின் (Erin Farrell Rosenberg) சட்டபூர்வமான கருத்தும் உள்ளது. இவ் அறிக்கை பலவந்தமான இட மாற்றம் மற்றும் துன்புறுத்தல் ஆகிய மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்காக "நம்பகமான ஆதாரங்களை" வழங்குகிறது என்பது அக்கருத்தாகும்.

சீன வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட ஒரு எழுத்து பூர்வ அறிக்கையில், "இந்த அறிக்கை ஆசிரியரின் தனிப்பட்ட பார்வை மட்டுமே. அதன் பெரும்பாலான உள்ளடக்கங்கள் உண்மை இல்லை" என்று கூறியுள்ளது. "சின்ஜியாங்கைப் பற்றி தெரிவிக்கும் போது ஊடகவியலாளர்கள் சீன அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ தகவல்களை அடிப்படையாகப் பயன்படுத்துவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்." என்று தெரிவித்துள்ளது.

"தன்னார்வ ஈடுபாட்டுக்கு உத்தரவாதம்" மற்றும் தொழிற்சாலைகள் தொழிலாளர்களை "சுதந்திரமாக வெளியே போய்வர" அனுமதிக்கின்றமை என்பவை வறுமையை எதிர்த்துப் போராடுவதற்கான முயற்சியை உத்தரவாதப்படுத்தும் என்று நங்காய் அறிக்கை ஆசிரியர்கள் உயர்வாக எழுதியுள்ளார்கள். ஆனால் அந்தக் கூற்றுக்கள் நடைமுறையில் செயல்படும் விதம் குறித்து அவர்கள் வழங்கும் விவரங்கள் அந்தக் கூற்றுகளோடு முரண்படுகின்றன.

**தன்னார்வ ஈடுபாட்டு மாயை** எத்தனை தொழிலாளர்களை அணிதிரட்ட வேண்டும் என்று அதிகாரிகளுக்கு இலக்குகள் வழங்கப்படுகின்றன. இலக்குகளை பூர்த்தி செய்ய அழுத்தம் உள்ளது. ஆட்சேர்ப்பு நிலையங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 19 வயதான புசாயனாப்பின் விஷயத்தைப் போலவே கூட்டாக அணிதிரட்டவும் மற்றும் வீடுகளுக்கு சென்று ஆட்சேர்க்கவும் அதிகாரிகள் பணிபுரிந்தனர். ஹோடன் (Hotan) பிரிவில் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட நேரத்தில் ஏற்கனவே 250,000 தொழிலாளர்கள் (அதன் மொத்த உழைக்கும் வயது மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு) ஏற்றுமதி செய்யப்பட்ட பின்னும் இலக்குகள் எட்டப்படவில்லை.

ஒவ்வொரு கட்டத்திலும் கட்டுப்பாடுகள் உள்ளதற்கான அறிகுறிகள் உள்ளன. அணிதிரட்டப்பட்ட அனைவரும் "அரசியல் சிந்தனைக் கல்வி" கட்டாயமாக்கப்படுகிறது. பின்னர் குழுக்களாக தொழிற்சாலைகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். அவர்களை பாதுகாக்கவும் நிர்வகிக்கவும் அவர்களுக்கு தலைவராக ஒரு அரசியல் அதிகாரி உடன் வருவார்.

தங்கள் நிலங்களை அல்லது கால்நடைகளை விட்டு விட்டு வெளியேற விரும்பாத விவசாயிகள், அவர்கள் இல்லாத நேரத்தில் அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பை ஒரு மையப்படுத்தப்பட்ட அரசாங்கத் திட்டத்திற்கு மாற்ற ஊக்குவிக்கப்படுகிறார்கள். அவர்கள் புதிய தொழிற்சாலைகளுக்கு வந்தவுடன், அதிகாரிகளுடன் ஒன்றாக வதிவதற்கும் "மையப்படுத்தப்பட்ட நிர்வாகத்தின்" கீழ் வைக்கப்படுகிறார்கள்.

அதேவேளை சீனாவில் உள்ள இனவாதம் இந்த திட்டத்தை செயற்படுத்துவதற்குத் தடையாக இருப்பதாகவும் இந்த அறிக்கை தெரிவிக்கிறது. சீனாவின் கிழக்கு பகுதியிலிருக்கும் பிற மாகாணங்களுக்கு பெருமளவான உய்குர்களின் வருகையை எதிர்க்கும் அங்குள்ள உள்ளூர் பொலிசார் அவர்களை திருப்பி அனுப்புவதும் நடக்கிறது.

அத்துடன் சிஞ்ஜியாங்கில் சீனாவின் கொள்கைகள் மிகவும் கடுமையாக இருப்பதாகவும் அறிக்கையில் சில இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, மறு கல்வி முகாம்களில் வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை சின்ஜியாங்கில் தீவிரவாதத்துடன் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையை விட "மிக அதிகமாக" இருப்பதாகக் கூறுகிறது. "முழு உய்குர் மக்களையும் கலகக்காரர்களாக கருதக் கூடாது" என்று அது கூறுகிறது.

**சுதந்திரமாக போய் வரும் உரிமை நாடகம்**

ஹுவாபு (Huafu) ஆடை நிறுவனம் சீனாவின் கிழக்கு மாகாணமான அன்ஹுய் (Anhui) மாகாணத்தில் உள்ள ஹுவாய்பீ (Huaibei) நகர் தொழிற்பேட்டையில் அமைந்துள்ளது. இந்த தொழிற்சாலைக்கு தான் புசாயனாப் அனுப்பப்பட்டார். இத் தொழிற்சாலையை BBC பார்வையிடப் போன போது ஐந்து மாடி உய்குர் தங்குமிடக் கட்டடம் பெரும்பாலும் வெறுமையாக காணப்பட்டது. ஒரு சாளரத்தில் மட்டும் ஒரு சோடி காலணிகளைக் காணக்கூடியதாக இருந்தது.

வாயில் பாதுகாப்புக்காவலர் உய்குர் தொழிலாளர்கள் நாட்டின் கோவிட் கட்டுப்பாடுகள் காரணமாக "வீட்டிற்குத் திரும்பிச் சென்று விட்டனர்" என்று தெரிவித்தார். ஹுவாபு நிறுவனம் எமக்கு அளித்த அறிக்கையில் "நிறுவனத்தில் தற்போது சின்ஜியாங் தொழிலாளர்கள் வேலை செய்யவில்லை." என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அமோசன் நிறுவனத்தின் இங்கிலாந்து இணையதளத்தில் ஹுவாபு நூல் கொண்டு தயாரிக்கப்பட்ட தலையணைகள் விற்பனையில் உள்ளன. இருப்பினும் இந்த தயாரிப்பு BBC பார்வையிட்ட குறிப்பிட்ட தொழிற்சாலையுடன் சம்பந்தப்பட்டுள்ளதா அல்லது நிறுவனத்திற்கு சொந்தமான பிற தொழிற்சாலைகள் ஒன்றில் தயாரிக்கப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. அமேசான் கட்டாய உழைப்பு பயன்படுத்துவதை சகித்துக் கொள்ளளாது என்றும், அதன் விநியோகச் சங்கிலித் தொடர் விதிகளை திருப்தி செய்யாத தயாரிப்புகளைக் கண்டறிந்தால், அவை விற்பனையிலிருந்து நீக்கப்படும் என்றும் அமோசன் BBC இற்கு தெரிவித்தது.

BBC சீனாவை தளமாகக் கொண்ட சர்வதேச பத்திரிகையாளர்களுடன் இணைந்து மொத்தம் ஆறு தொழிற்சாலைகளுக்கு சென்றது. குவாங்டாங் (Guandong) மாகாணத்தில் உள்ள டோங்குவான் லுஷோ (Dongguan Luzou) காலணி தொழிற்சாலையில், உய்குர் ஊழியர்கள் தனியான தங்குமிடங்களில் இருப்பதாக ஒரு தொழிலாளி கூறினார். அவர்களுக்கென்று தனியான உணவகமும் உள்ளதாக தெரிவித்தார். உள்ளூர் வாசி ஒருவர் அத் தொழிற்சாலை அமெரிக்க ஸ்கெச்சர்ஸ் (Skechers) நிறுவனத்திற்கு பொருட்களை உருவாக்குகிறது என்று கூறினார்.

உய்குர் தொழிலாளர் ஸ்கெச்சர்ஸ் தயாரிப்புக்களை உருவாக்குவதைக் காட்டும் உறுதிப்படுத்தப்படாத காணொலிகள் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டிருந்தன. அவற்றினூடாக இந்த தொழிற்சாலை ஸ்கெச்சர்ஸ் நிறுவனத்துடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. "கட்டாய உழைப்பை தாம் சகிப்பதில்லை" என்று ஸ்கெச்சர்ஸ் ஓர் அறிக்கையில் கூறியது. ஆனால் அது டோங்குவான் லுஷோவை ஒரு உற்பத்தியாளராகப் பயன்படுத்தியதா என்ற கேள்விகளுக்கு அது பதிலளிக்கவில்லை.

அத்தொழிற்சாலையில் செய்யப்பட்ட நேர் காணல்களில், உய்குர் தொழிலாளர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் தொழிற்சாலையை விட்டு வெளியேற சுதந்திரம் இருப்பதாக தெரிய வந்தது. ஆனால் நாம் பார்வையிட்ட பிற தொழிற்சாலைகளில், அதற்காக சான்றுகள் தெளிவாக இருக்கவில்லை. குறைந்தது இரண்டு இடங்களில் சில கட்டுப்பாடுகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. வூகான் நகரில் உள்ள தொழிற்சாலையில் இருந்த ஏறத்தாழ 200 உய்குர் தொழிலாளர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை என ஒரு ஹான் சீன ஊழியர் தெரிவித்தார்.

தனது அரசியல் கல்விப் பயிற்சியைத் தொடங்க புசாயனப் தனது கிராமத்தை விட்டு வெளியேறிய மூன்று மாதங்களுக்குப் பிறகு, சீன அரசு–தொலைக்காட்சி குழுவினர் அவளை மீண்டும் சந்திக்கிறார்கள். இந்த முறை அன்ஹுயில் உள்ள ஹுவாபு ஆடை நிறுவனத்தில் சந்திப்பு நடக்கிறது. இம்முறை சீன கலாசாரத்தில் அவளின் ஒருங்கிணைப்பே செய்தி அறிக்கையின் மையப் பொருளாகும்.

ஒரு காட்சியில், புசாயனப் தனது தவறுகளுக்காக திட்டு வாங்குகிறாள். அதனால் கண்ணீர் விடுகிறாள். ஆனால் இறுதியில், ஒரு மாற்றம் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

அதாவது "பேசாமல் தலையைக் குனிந்து கொண்டிருந்த ஒரு பெண், தனது வேலைத்தளத்தில் அதிகாரம் பெறுகிறார்" என்று தெரிவிக்கப்படுகிறது. அவளின் "வாழ்க்கை முறைகள் மாறுகின்றன, எண்ணங்கள் மாறுகின்றன."


சி.ஏ. பிரேமச்சந்திரா

# ஐ.நாவில் யுத்தக் குற்றங்களுக்கான நீதியைத் தடுக்க சிறிலங்காவின் முயற்சிகள்

பிராட் அடம்ஸ் – நீதியான பாதுகாப்பு
(Brad Adams –Just Security, www.justsecurity.org)
தமிழாக்கம் – நிமிர்வு

கொலைக் குழு ஒன்றுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் ஒருவர் தங்கள் மத்தியில் இருப்பார் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இராஜதந்திரிகள் நினைத்திருக்க மாட்டார்கள். ஆயினும் இன்று அவர்கள் எதிர்நோக்கும் நிலைமை அதுதான். ஜெனீவாவில் இலங்கையின் புதிய நிரந்தர பிரதிநிதியாக சி.ஏ. சந்திரபிரேமா கடந்த கார்த்திகை மாதத்திலிருந்து இணைந்து கொண்டார். மாசி மாத பிற்பகுதியில் தொடங்கிய சபையின் அடுத்த அமர்வு தமிழ் மக்களுக்கு ஒரு முக்கியமான வாய்ப்பை வழங்குகிறது. இலங்கையில் நீதிக்கான வாய்ப்பை தொடர்ச்சியாக பின் தள்ளுகின்ற தண்டனையிலிருந்து தப்பும் செயற்பாட்டை தடுக்கும் வாய்ப்பே அதுவாகும்.

சந்திரபிரேமா ஒரு மூத்த செய்தியாளர், கட்டுரையாளர் மற்றும் எழுத்தாளர் என்று வாஞ்சையாக விவரிக்கப்படுகிறார். ஆனால், அவர் பல தசாப்தங்களாக 'தாடி பிரியந்தா' என அறியப்பட்டிருந்தார். 1980 களின் பிற்பகுதியில் தெற்கு இலங்கையில் இடதுசாரி இளைஞர்களின் கிளர்ச்சியை அடக்க கொலைக்குழுவாக செயற்பட்ட அரசாங்க சார்பு மக்கள் புரட்சிகர செம்படை (People's Revolution Red Army, PRRA) உறுப்பினராக அவர் இருந்ததாக கூறப்படுகிறது.

இலங்கை பாதுகாப்பு படையினருடன் ஒருங்கிணைந்து மாணவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் என நூற்றுக்கணக்கான கொலைகளை செய்ததாக PRRA மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. கொலை செய்யப்பட்டவர்களின் உடல்களில் கொலைக்குப் பொறுப்பேற்று சுவரொட்டிகளை விட்டு செல்வது அவர்களின் வழக்கமாக இருந்தது.

1989 இல் நடந்த சரிதா லங்காபுரா மற்றும் காஞ்சனா அபயபாலா ஆகிய இரு மனித உரிமை வழக்கறிஞர்களின் கொலைகள் தொடர்பாக 2000 ஆம் ஆண்டில், சந்திரபிரேமாவை இலங்கை அதிகாரிகள் கைது செய்தனர். நான்கு கொலைகளுக்கு சந்திரபிரேமா தான் காரணம் என்று முன்னாள் மூத்த காவற்துறை அதிகாரி சத்திய வாக்குமூலம் அளித்தமையைத் தொடர்ந்தே அவர் கைது செய்யப்பட்டார். ஆனால் போதிய ஆதாரங்கள் இல்லை என்று அரச சட்டதரணிகள் நாயகம் தீர்மானித்தமையால் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

மூத்த அரசியல்வாதிகள் இந்த கொலைகளுடன் தொடர்புபட்டுள்ளமையால் குற்றங்கள் மூடிமறைக்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. கடந்த ஆண்டு தொடக்கத்தில் உயர் பதவிகளுக்கு நபர்களைத் தெரிவு செய்யும் பாராளுமன்றக் குழுவிற்கு சந்திரபிரேமா தொடர்பாக பொலிஸ் வழங்கிய சான்றிதழில் அவர் ஒருபோதும் குற்றவியல் புகாருக்கு உட்பட்டதில்லை என்று கூறப்பட்டுள்ளது. இது அந்த சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

### உயர் தலைவர்களுக்கு தண்டனையற்ற தன்மை

ஜனாதிபதி கோத்தபயா ராஜபக்ச நிர்வாகத்தில் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களில் கடும் குற்றங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டவர்களில் சந்திரபிரேமா மட்டும் தான் ஒரே நபர் அல்ல. 2009 இல் தோற்கடிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் உடனான நீண்ட கால மோதலின் போது போர்க் குற்றங்கள் மற்றும் பிற கடுமையான அத்துமீறல்கள் உட்பட பல முறைகேடுகள் குறித்து ஜனாதிபதியே குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன, போரின் இறுதி மாதங்களில் கைப்பற்றப்பட்ட போராளிகளை ஒட்டுமொத்தமாக சுட்டுக் கொன்றதாக குற்றம் சாட்டப்படும் இலங்கை இராணுவத்தின் 53 ஆவது பிரிவுக்கு கட்டளை அதிகாரியாக செயற்பட்டவர். தற்போதைய பாதுகாப்பு ஊழியத் தலைவரும், இராணுவத்தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா, அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது. "கட்டளைப் பொறுப்பு ஊடாக மனிதஉரிமை மீறல், பிரதானமாக சட்ட விரோதமான கொலைகள் என்பவற்றில் அவரது ஈடுபாடு தொடர்பாக நம்பகமான தகவல்கள்" கிடைக்கப் பெற்றதனால் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் இலங்கையின் நிரந்தர பிரதிநிதியாக, சந்திரபிரேமாவின் சமர்ப்பிப்பில், அரசாங்கப் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்காக நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான நீண்டகால கோரிக்கைகளை மற்றைய நாடுகள் கைவிட வேண்டும் என்று வற்புறுத்துவதும் அடங்கும்.

LTTE இனதும் அரசாங்கத்தினதும் அட்டு ழியங்கள் ஐ.நா.அறிக்கைகளில் விரிவாக ஆவணப்படுத் தப்பட்டுள்ளன. இது 2015 ஆம் ஆண்டில் ஒருமித்த மனித உரிமைகள் கவுன்சில் தீர்மானத்திற்கு வழி வகுத்தது. அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் இலங்கை அரசாங்கத்தால் ஆதரிக்கப்பட்டது. என்ன நடந்தது என்பதற்கான உண்மையைக் கண்டுபிடிப் பதற்கும், பொறுப்பானவர்களை சர்வதேச உதவியுடன் பொறுப்பேற்கச் செய்வதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் நீதி மற்றும் இழப்பீடுகளை வழங்குவதற்கும் அரசாங்கம் உறுதி பூண்டது.

2019 கார்த்திகையில் கோத்தபாய ராஜபக்ச ஜனாதி பதித் தேர்தலில் வெற்றி பெற்றார். மூன்று மாதங்களுக்குப் பிறகு இலங்கை இந்த உறுதிப்பாட்டிலிருந்து விலகுவதாக அறிவித்தது. இது ஆச்சரியமளிப்பதாக இல்லை. ஏனெனில் அவர் தான் இறுதி யுத்தத்தின் போது பாதுகாப்பு செயலாள ராக இருந்தார்.

### கிடைத்த அரிய நீதியும் தலைகீழானது

பாதிக்கப்பட்டவர்களின் காயங்களில் உப்பைத் தேய்ப்பது போல, 2020 பங்குனி மாதத்தில், முன்னாள் இராணுவ சார்ஜென்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு கோட்டா மன்னிப்பு வழங்கினார். 2000 ஆம் ஆண்டில் குழந்தை கள் உட்பட எட்டு தமிழ் பொதுமக்கள் படுகொலை செய்யப் பட்ட வழக்கில் ரத்நாயக்க 2015 ஆம் ஆண்டில் குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்டு தண்டனை பெற்றிருந் தார். சட்டமீறல்களுக்கு பொறுப்பு எனக் காணப்பட்ட மிகக் குறைந்த அளவேயான பாதுகாப்புப் படை உத்தியோகத்தர் களில் சுனில் ரத்நாயக்க ஒருவர். சந்திரபிரேமா கோட்டா வுக்கு மிகவும் நெருக்கமானவர். அவர் “கோட்டாவின் போர்” என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார். அது தற்போதைய ஜனாதிபதியின் நடவடிக்கைகளை மகிமைப் படுத்துகிறது. அவரின் மீதான போர்க்குற்ற குற்றச்சாட்டுகளை நிராகரிக்கிறது.

போர்க்குற்றச்சாட்டுகளுக்கு தீர்வு காண ராஜபக்ச நிர் வாகம் தனது சொந்த நீதி நடவடிக்கைகள தொடரும் என்று ஜெனீவாவில் உள்ள இலங்கை தூதுக்குழு கூறுகிறது. ஆயினும் “உள்நாட்டு விசாரணை ஆணையத்தை நியமிப் பதனூடாக பொறுப்புக்கூறலை அடைவதற்கு உறுதி பூண் டுள்ளது” என்று அக்குழு கூறுவது நம்பத்தகுந்த தல்ல. மாறி மாறித் தொடரும் நிர்வாகங்களின் கீழ் உரு வாக்கப்பட்ட உள்நாட்டு ஆணைக்குழுக்கள் நீண்ட அறிக்கைகளை உருவாக்கியுள்ளன. ஆனால் அவை நேரத்தை வீணடிப்பதற்கு மேலாக எதனையும் சாதிக்க வில்லை. அவை பாதிக்கப்பட்டவர்களிடையே கசப்பு மற்றும் ஏமாற்றத்தைத் தவிர வேறொன்றையும் உருவாக்க வில்லை.

ராஜபக்சக்கள் நீண்டகாலமாக நீதி முயற்சிகளை எதிர்த்து வந்துள்ளனர். கார்த்திகை 18 நடத்திய உரையில் “போர் நாயகர்களை” பாதுகாப்பேன் என இறுமாப்பாக உறுதியளித்துள்ளார். பல தசாப்தங்களாக இருந்த அவசர நிலை, மோதல் மற்றும் தண்டனையற்ற தன்மை ஆகியவற்றால் சிறிலங்காவின் பாதுகாப்புத்துறையும் நீதித் துறையும் சிதைக்கப்பட்டும் ஊழல் மயப்படுத்தப்பட்டும் உள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகம் தெரிவித்துள்ளது. பல ஆண்டுகளாக நீதித்துறையில் ஜனாதிபதியின் அரசியல் தலையீடு வழக்கமாகி விட்டது. ஒரு புதிய விசாரணையை நடத்துவதாக அரசாங்கம் புரட்டாதி மாதம் உறுதியளித்தது. ஆயினும் மூத்த இராணுவ அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் “ஏற்றுக் கொள்ள முடியாதவை” மற்றும் “ஆதாரமற்றவை” என்று மனித உரிமைகள் பேரவையில் கூறியதனூடாக அரசாங்கம் உண்மையாக எதையும் செய்யப் போவ தில்லை என்று தெளிவுபடுத்தியுள்ளது.

ஜெனீவாவில் சந்திரபிரேமாவின் தூதுக்குழு வின் வெற்று உறுதிமொழிகளுக்கு செவிசாய்ப்பதற்கு பதிலாக, மனித உரிமைகளை மதிக்கும் அரசாங்கங்கள் மிக மோசமான சர்வதேச குற்றங்களுக்கு எதிராக சட்டத் தை நிலை நாட்ட முன் நிற்க வேண்டும். மாசி 22 ஆம் தேதி ஆரம்பமாகியுள்ள மனித உரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வில், இலங்கையில் நடந்த அட்டூழியங்களுக்கு பொறுப்புக் கூறும் புதிய தீர்மானத்தை மனித உரிமை கள் பேரவை உறுப்பினர்கள் ஆதரிக்க வேண்டும். போர்க் குற்றங்களுக்கான ஆதாரங்களை சேகரிக்கவும் பாதுகாக்க வும், அவற்றை பகுப்பாய்வு செய்யவும் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தை நிர்ப்பந்திக்க வேண்டும். பொறுப்புக் கூற லுக்கான வழிகள் குறித்து சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்க நிர்பந்திக்க வேண்டும். அத்துடன் தொடர்ந்தும் நடந்து வரும் அத்துமீறல்கள் குறித்தும் சபைக்கு அறிவிக்கும் படி உயர்ஸ்தானிகர் கட்டாயப்படுத்தப்பட வேண்டும். பாதிக் கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்கவும் எதிர்கால துஷ்பிரயோகங்களின் ஆபத்தை எதிர்கொள்வதற்கும் இதுவே சிறந்த வழியாகும்.

குறிப்பு: பிராட் ஆடம்ஸ் (@BradMAdam) 2002 முதல் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியா பிரிவின் நிர்வாக இயக்குநராக இருந்து வருகிறார். ஆப் கானிஸ்தான் முதல் பசிபிக் வரை 20 நாடுகளில் மனித உரிமைகள் தொடர்பான அமைப்பின் பணிகளை மேற் பார்வையிடுகிறார். மனித உரிமைகள் கண்காணிப் பகத்தில், கருத்துச் சுதந்திரம், சிவில் சமூகம் மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலர்கள், பயங்கரவாத எதிர்ப்பு, அகதி கள், பாலினம் மற்றும் மத பாகுபாடு, ஆயுத மோதல்கள் மற்றும் தண்டனையற்ற தன்மை உள்ளிட்ட பல்வேறு விஷ யங்களில் அவர் பணியாற்றியுள்ளார். அவர் நியூயார்க் டைம்ஸ், வாஷிங்டன் போஸ்ட், கார்டியன், மற்றும் வோல் ஸ்ட்ரீட் ஜர்னல் உள்ளிட்ட வெளியீடுகளுக்கு வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பாக எழுதியுள்ளார்.



தேசத்தைத் தாங்கும் தூண்களான நிலம், மொழி, பொருளாதாரம், கலாச் சாரம், மக்கள் கூட்டம் என்பன அழிக்கப் படுவதே இனப்பிரச்சினையாகும். நில அழிப்பு சுதந்திரத்திற்கு முன்னரே ஆரம்பமானது. அதாவது 1941 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கல்லோ யாத்திட்டத்துடன் ஆரம்மானது என லாம். சுதந்திரத்தின் பின்னர் வடக்கை யும் கிழக்கையும் இணைக்கின்ற மையமான திருகோணமலை மாவட் டத்திலேயே நிலப்பறிப்பு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது.

# இனப்பிரச்சினை என்றால் என்ன?

-சி.அ. யோதிலிங்கம்-

தமிழ் மக்கள் ஒரு தனியான தேசமாக இலங் கைத்தீவில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். வடக்கும், கிழக்கும் அவர்களது தாயகமாக உள்ளது. வலிமையான பண்பாடும், கலாச்சாரமும், ஆட்சிமரபும் அவர்களிடம் இருக்கின்றது. ஆங்கிலேயர்கள் இத்தனித் துவ அடையாளங்களுடன் வாழ்ந்த மக்களை தங்கள் நலன்களுக்காக இலங்கை என்கின்ற ஒற்றையாட்சி நிர்வாகக்கட்டமைப்புக்குள் இணைத்தனர். இதனால் வடக்கு கிழக்கில் பெரும்பான்மையாக வாழ்ந்த தமிழ் மக்கள் முழு இலங்கையிலும் சிறுபான்மையாக்கப்பட்டனர்.

தமிழ் மக்களை பலவந்தமாக இலங்கைத்தீவின் ஏனைய பகுதிகளோடு இணைத்த ஆங்கிலேயர்கள் தமிழ் மக்கள் தங்கள் அடையாளங்களைப் பேணும் வகை யில் பன்மைத்துவ அதிகாரக் கட்டமைப்பை உருவாக்க வில்லை. மாறாக ஒற்றை அதிகாரக்கட்டமைப்பை உருவாக்கி பெரும்பான்மை இனத்தின் தயவில் வாழும் படி விட்டனர். ஆங்கிலேயரிடமிருந்த ஆட்சி அதிகாரங் கள் படிப்படியாக இலங்கையர்களின் கைகளுக்கு மாற்றப் பட்டபோது பெரும்பான்மை ஜனநாயகம் என்ற கோட் பாட்டின் கீழ் பெரும்பான்மை இனத்தின் கைகளுக்கு ஆட்சி அதிகாரங்கள் சென்றன.

1833 ஆம் ஆண்டு கோல்புறூக் அரசியல் சீர் திருத்தத்துடன் ஆரம்பமான இவ்வதிகாரக் கைமாற்றம் 1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு அரசியல் யாப்புடன் முழுமையாக நிறைவு செய்யப்பட்டது. தமிழின அழிப்பும் 1972ஆம் ஆண்டுடன் உச்சத்திற்குச் சென்றது. இந்நிலையில் இன அழிப்புடன் தொடர்புடைய அனைத்து விடயங்கள் தொடர்பிலும் தெளிவு அவசியமாகவுள்ளது.

### 1. இனப்பிரச்சினை என்றால் என்ன?

தமிழ் மக்கள் ஒரு தனியான தேசமாக வாழ்வது அழிக்கப்படுவதே இனப்பிரச்சினையாகும். அதாவது தமிழ்

திட்டமிட்ட விவசாயக் குடியேற்றம், சட்டவிரோத விவசாயக் குடியேற்றம், வியாபாரக்குடியேற்றம், மீனவர் குடியேற்றம், கைத்தொழிற் குடியேற்றம், புனித பிரதேசங்களுக்கான குடியேற்றம், முப்படைப் பண்ணைகளுக்கான குடியேற்றம் என அனைத்து குடியேற்ற முறைமைகளும் திருகோணமலை மாவட்டத்தில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. திட்டமிட்ட விவசாயக் குடியேற்றங்களாக அல்லைத்திட்டம், கந்த ளாய்த்திட்டம், மொறவேவாத்திட்டம், மகாதிவுல்வே வத்திட்டம், பதவியாத்திட்டம் என்பன உருவாக்கப்பட்டன. இது பின்னர் வவுனியா, மன்னார் மாவட்டத்திலும் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் உச்சநிலைக்குச் சென்றது. குடியேற்றங்களுக்கு அரசியல் அந்தஸ்தினைக் கொடுப் பதற்கான சிங்களத் தேர்தல் தொகுதிகளும், உள்ளூராட்சி சபைகளும் திட்டமிட்டு உருவாக்கப்பட்டன.

1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. 1972ஆம் ஆண்டு முதலாவது குடியரசு யாப்பின் மூலம் சிங்கள மொழி அரச கரும மொழி என்பதற்கு அரசியல் யாப்பு அந்தஸ்து கொடுக்கப்பட் டது. தமிழர் தாயகத்தை சிங்கள மயமாக்குவதில் சிங்கள மொழி பெரிதும் பயன்பட்டது. திருகோண மலை, அம்பாறை அரசாங்க செயலகங்கள் தற்போது சிங்கள மொழியிலேயே இயங்குகின்றன.

தமிழ் மக்களின் பொருளாதார அடித்தளம் நிலமும், கடலுமாகும். திட்டமிட்ட விவசாயக் குடியேற் றங்கள் மூலம் நிலவளம் திட்டமிட்டு பறிக்கப்பட்டது. தமிழ் மக்களின் விவசாயப் பொருளாதாரத்திற்கு ஊக்குவிப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை, தொடர் பராமரிப்புக்களும் இருக்கவில்லை. சந்தை வாய்ப்புக்களும் வழங்கப்படவில்லை. கடல்வளமும் மீனவர் குடியேற் றம் என்ற பெயரில் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது. இது தவிர கைத்தொழிற்துறை மறுக்கப்பட்டது. அரச வேலை வாய்ப்புக்களிலும் திட்டமிட்டு புறக்கணிப்பு மேற்கொள்ளப் பட்டது.

தமிழ் மக்களை ஒன்றிணைப்பது அவர்கள் காலம் காலமாக பின்பற்றி வந்த கலாச்சாரமே! இது திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது. சிங்களவர் அறவே வாழாத பிரதேசங்களில் கூட பௌத்த விகாரைகள் கட்டப்படுகின்றன. இதனூடாக பௌத்த மதம் ஆக்கிர மிக்கும் கருவியாக பயன்படுத்தப்படுகின்றது.

ஒரு தாயகத்தில் வாழும் மக்கள் திட்டமிட்டு கொத்துக்கொத்தாக கொலைசெய்யப்படுவதும் இன அழிப்பே! திட்டமிட்ட நடவடிக்கைகள் மூலம் 1958, 1977, 1983 ஆம் ஆண்டுகளில் இலங்கைத்தீவின் தென் பகுதிகளில் இன அழிப்பு இடம்பெற்றது. 1983ற்கு பின்னர் தமிழர் தாயகத்திலேயே இவ் அழிப்பு மேற்கொள்ளப் பட்டது. முள்ளிவாய்க்கால் படுகொலை இவ் இன அழிப்பின் உச்சம் ஆகும்.

**2. இன அழிப்பு ஏன் ஏற்படுகின்றது?**

சிங்கள மக்கள் இலங்கைத் தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரியது, ஏனையவர்கள் இங்கு வாழ்ந்துவிட்டுப் போகலாம், உரிமைகள் எதுவும் கேட்கக் கூடாது, என்று கருதுவதே இதற்கு காரணம் ஆகும். இக் கருத்து நிலை அரசியல் வாதிகளினால் மட்டும் கட்டி யெழுப்பப்பட்டதல்ல. மாறாக சமயம், வரலாறு, கலாச்சாரம், ஐதீகம் என்பவற்றினால் கட்டியெழுப்பப்பட்டது. அரசியல் வாதிகள் தமது இருப்பிற்காக இக்கருத்து நிலை திரட்சிக்கு மேல் குந்திக் கொண்டனர். இது விடயத்தில் ஏனைய இனத்தவர்களை இலங்கைத்தீவில் வாழவிட்டதே சிங்கள மக்களின் பெருந்தன்மையெனக் கருதுகின்றனர். ஒற்றை யாட்சிக் கட்டமைப்பும் அதனைச் செயற்படுத்தும் அரச யந் திரமும் இவ் அழிப்பிற்குத் துணை புரியும் பிரதான கருவி களாக உள்ளன.

தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பது இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமானது என்ற இலக்கிற்கு இடையூறானதாகும். இதனால் தான் தமிழ்த் தேசத்தின் தாங்கு தூண்களான நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம், மக்கள் கூட்டம் என்ப வற்றை அழிப்பதன் மூலம் தமிழ்த் தேசத்தை அழிக்க முற்படுகின்றனர். தமிழ் மக்களினது இது வரை காலப் போராட்டமானது இத்தேச அழிப்பிலிருந்து பாதுகாப் பதற்கான தற்காப்புப் போராட்டமே.

**3. தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றினை எவ்வாறு வகைப்படுத்தலாம்?**

தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றினை அதன் வளர்ச்சிக் கட்டங்களை அடிப்படையாகக் கொண்டு பின் வரும் காலகட்டங்களாக பாகுபடுத்தலாம்.

1. 1833-1920 வரையான கால கட்டம்.
2. 1920-1949 வரையான கால கட்டம்.
3. 1949-1968 வரையான கால கட்டம்.
4. 1968-2009 வரையான கால கட்டம்.
5. 2009 ற்கு பின்னர்.

**1. 1833-1920 வரையான கால கட்டம்.**

இலங்கையின் நவீன அரசியல் வரலாறு 1833 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கோல்புறூக் அரசியல் சீர்திருத்தத்துடன் ஆரம்பமாகின்றது. முதலாவது கால கட்டத்தில் தமிழர்கள் தமது அடையாளத்தை வலியுறுத் தும் இன அரசியலை முன்னெடுக்கவில்லை. அரசியல் தளத்தில் அவர்கள் தங்களை இலங்கையர் என்றே அடை யாளப்படுத்தினர்.

பண்பாட்டுத்தளத்தில்தான் தமிழர்கள் என்ற அடையாளத்தைப் பேணினர். இதனால்தான் இக்கால கட்டத்தில் தமிழர் தலைவர்களாக அடையாளப்படுத்தப் பட்ட சேர்.முத்துக்குமாரசுவாமி, சேர்.பொன்.இராம நாதன், சேர்.பொன்.அருணாசலம், ஆகியோர் தமிழ் மக்களுக்கு மட்டும் தலைவர்களாக இருக்கவில்லை. முழு இலங்கைக்கும் தலைவர்களாக இருந்தனர்.

காலனித்துவ ஆட்சிக்கெதிரான இலங்கையின் முதலாவது தேசிய இயக்கமான இலங்கைத்தேசிய காங்கிரசின் தலைவராக சேர்.பொன்.அருணாசலமே தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஆட்சி அதிகாரம் ஆங்கி லேயரிடம் இருந்த நிலையும், அதற்கெதிராகப் போராட வேண்டிய நிலையும் இதற்குக் காரணமாக இருந்திருக் கலாம். 1920 ஆம் ஆண்டு மானிங் அரசியல் சீர்திருத் தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதேசவாரிப் பிரதி நிதித்துவ முறையும் சிங்களத்தரப்பு அதில் நேர்மையீன மாக நடந்து கொண்டமையும் தமிழர் மத்தியில் அடையாள அரசியலான இன அரசியலை தொடக்கி வைத்தது.

**2. 1920-1949 வரையான கால கட்டம்.**

1919 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 11 ஆம் திகதி இலங்கையின் முதலாவது தேசிய இயக்கமான இலங்கைத்தேசிய காங்கிரஸ் உருவாகுவதற்கு முன்னர் பிரதிநிதித்துவ விவகாரம் தொடர்பாக தமிழ்த் தலை வர்களுக்கும் சிங்களத் தலைவர்களுக்குமிடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. பிரதேசவாரிப் பிரதி நிதித்துவம் அறிமுகப்படுத்தப்படும் போது வடக்கு கிழக்கில் போதுமான பிரதிநிதித்துவமும் கொழும்பில் ஒரு பிரதிநிதித்துவமும் வழங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டது. சிங்கள மக்களின் சார்பில் இலங்கைத் தேசிய சங்கத்தின் தலைவர் ஜேம்ஸ் பீரிசும், இலங்கை அரசியல் சீர்திருத்தக் கழகத்தின் சார்பில் ஏ.ஜே.சமர விக்கிரமவும் கையெழுத்திட்டனர். தமிழ் மக்களின் சார்பில் யாழ்ப்பாணச் சங்கத்தின் பிரதிநிதிகள் கையொப்பமிட்டனர். சேர்.பொன்.அருணாசலம் நடுவராகக் கடமையாற்றினார்.

இலங்கைத் தேசிய காங்கிரஸ் உருவாக்கப் பட்டு மானிங் அரசியல் சீர்திருத்தம் நடைமுறைக்கு வந்தபோது சிங்களத் தலைவர்கள் அவ்வொப்பந்தத் தின் கடப்பாட்டிலிருந்து பின்வாங்கினர். கொழும்பு தமிழ்ப்பிரதிநிதித்துவம் தமிழர்களுக்கு மறுக்கப்பட்டது. இந்நிலையிற்தான் சேர்.பொன்.அருணாசலம் இலங் கைத் தேசிய காங்கிரஸில் இருந்து வெளியேறி தமிழர் மகா சபையை உருவாக்கினார்.

இத்தமிழர் மகா சபையின் தோற்றத்துடன் தமிழ் இன அரசியலும் ஆரம்பித்துவிட்டது எனலாம். அருணாசலம் இதனை ஆரம்பித்தாலும் இக் கட்டத்தை நகர்த்தியவர் ஜீ.ஜீ.பொன்னம்பலமே! 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் திட்டம் அரை வாசிப் பொறுப்பாட்சியை வழங்கிய போது அவ்வதிகாரம் சிங்கள தேசத்திடம் மட்டும் சென்ற நிலையும் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையும் இதனை ஊக்கு வித்தது. இக்காலத்தில் இலங்கை என்கின்ற ஒற்றை யாட்சி அரசினை ஏற்றுக்கொண்டு அதற்குள் சம வாய்ப் புக்களை கோருகின்ற அரசியலாகவே தமிழ் அரசியல் இருந்தது. ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 50:50 கோரிக்கை இந்த வகையிலேயே எழுச்சியடைந்தது.

**3. 1949-1968 வரையிலான காலகட்டம்**

1947 ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது. இது சிங்கள தேசத்திடம் முழுமையான ஆட்சி அதிகாரத்தை வழங்கியது. ஆங்கி லேயர் பெயரளவு அதிகாரத்தை மட்டும் தமது கைகளில் வைத்திருந்தனர். தமிழர்களுடைய அபிலாசைகள் பெரி யளவிற்கு கருத்திலெடுக்கப்படவில்லை. சிறுபான்மையோர் காப்பீடுகள் என்ற வகையில் அரசியல் யாப்பின் 29 ஆவது பிரிவு, செனற்சபை, பல அங்கத்துவ தேர்தல் தொகுதிகள், கோமறைக் கழகத்திற்கு முறையிடும் உரிமை, நியமன உறுப்பினர் பதவிகள், அரசியல் யாப்பைத் திருத்துவதில் 2/3 பெரும்பான்மை போன்றன சேர்க்கப் பட்ட போதும் பேரினவாத ஆதிக்கத்திற்கு முன்னால் அவை நின்று பிடிக்கவில்லை. தமிழ் மக்கள் முற்று முழுதாகவே அரச அதிகாரக்கட்டமைப்பிற்கு வெளியில் தூக்கி வீசப்பட்டனர்.

இந்நிலையில் தமிழர் அரசியலும் பண்பு மாற றத்தைப் பெற்றது. தமிழ் இன அரசியல் தமிழ்த் தேசிய அரசியலாக வளர்ச்சி பெற்றது. வடக்கு- கிழக்கு எனத் தமிழர் தாயகத்தை வரையறுத்து. அதற்கு இறைமையைக் கோருகின்ற சமஸ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1949 ல் உருவாக்கப்பட்ட தமிழரசுக் கட்சி இதனை முன்வைத்தது.

## "தமிழ் மக்கள் ஒரு தனியான தேசமாக வாழ்வது அழிக்கப்படுவதே இனப்பிரச்சி னையாகும். அதாவது தமிழ் தேசத்தைத் தாங்கும் தூண்களான நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம், மக்கள் கூட்டம் என்பன அழிக்கப்படுவதே இனப்பிரச்சினையாகும்"

தந்தை செல்வா இக்கால கட்டத்தை நகர்த்திய தலைவராக எழுச்சியடைந்தார். தாயகக் கோரிக்கை முன்வைக்கப்பட்டதும் தமிழ் இன அரசியல் தமிழ்த் தேசிய அரசியலாக மாற்றம் பெற்றது. கொழும்பு-யாழ்ப்பாணம் என இருந்த தமிழர் அரசியல் வடக்கு-கிழக்கு என வளர்ச்சி கண்டது. மக்களை இணைத்த போராட்டங்கள் இடம் பெற்றன. காலிமுகத்திடல் சத்தியாக்கிரகப் போராட்டம் (1956), திருமலை யாத்திரை (1957), சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டம் (1958), அரச செயலகங்களின் முன்னால் சத்தியாக் கிரகப் போராட்டம் (1961) என்பன அவற்றில் முக்கிய மானவையாகும்.

மறுபக்கத்தில் போராட்ட அழுத்தங்கள் காரண மாக பண்டா செல்வா ஒப்பந்தம் (1957), டட்லி செல்வா ஒப்பந்தம் (1965), என்பனவும் கைச்சாத்திடப்பட்டன. எனினும் பெருந்தேசியவாதக் கட்டமைப்பு இவ்வொப் பந்தங்களை நடைமுறைப்படுத்த விடவில்லை. ஒரு ஒப்பந் தம் கிழித்தெறியப்பட்டது. மற்றைய ஒப்பந்தம் கிடப்பில் போடப்பட்டது.

இந்தக்கட்டத்தை நகர்த்திய தமிழரசுக்கட்சி 1965 ஆம் ஆண்டு வலுவான உத்தரவாதங்கள் இல்லா மல் ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கத்துடன் இணக்க அரசியலுக்கு சென்றது. அமைச்சர் பதவியையும் பெற்றுக்கொண்டது. இதுவே அதன் வீழ்ச்சிக்கும் காரண மாகியது. இளைஞர்கள் சமஸ்டிக் கோரிக்கையிலும் கட்சி அரசியலிலும் நம்பிக்கை இழந்தனர். தமிழ்த் தேசியப் போராட்டம் அடுத்த கட்டத்தை நோக்கி நகரத் தொடங்கியது.

(தொடரும்)

# தென் ஆசிய பூகோள அரசியலும் இலங்கையும்




நிஷா சேகர்
பாதுகாப்பு சர்வதேச விவகார செய்தியாளர்

சர்வதேச ரீதியில் நாடுகளிடையே எப்படியான தொடர்புகள் நிலவ வேண்டும், எந்த மாதிரியான பொருளாதார உறவுகள் இருக்க வேண்டும் என்பதே பூகோள அரசியலாகும். நாடுகளிடையேயான உறவுகள், வர்த்தகம், சுகாதாரம், மத நல்லிணக்கம், மனித உரிமைகள் ஆகியவற்றில் அக்கறை கொள்வதும் பூகோள அரசியலாகும். புவிசார் அரசியல் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் உள்ள மக்கள் தொகைக் கட்டமைப்பும் பொருளாதாரமும் தொடர்பான ஆதிக்கமாகும். ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் உள்ள மக்களின் அரசியல் ஆதிக்கம், பொருளாதார வளங்கள் மீதான ஆதிக்கம், ஆட்சி முறைமை, அரசுகளிடையயான உறவுகள் என்பவை புவிசார் அரசியலில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இலங்கை, இந்திய பெருங்கடலின் மத்தியிலும், இந்தியாவுக்கு மிக அருகிலும் அமைந்திருப்பதனால், அதிக கேந்திர முக்கியத்துவத்தை கொண்டுள்ளது. அது தான் இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார இருப்புக்கு காரணமாக விளங்குகிறது. இலங்கையின் வரலாறு முழுவதும் பிராந்திய சர்வதேச சக்திகளின் போட்டிக் களமாகவே அது இருந்துள்ளது. கிரேக்கர், ரோமானியர்களின் வர்த்தகம் முதற் கொண்டு தற்போது வரையும் ஏதோ ஒரு முனையத்தில் சர்வதேச சக்திகளின், பொருளாதார அரசியற் களமாக இலங்கை காணப்படுகிறது. அதற்கான காரணம் அதன் அமைவிட முக்கியத்துவமாகும்.

இந்திய பெருங்கடல் பகுதியில் இலங்கையின் அமைவிடத்தை கருத்திற் கொண்டு, இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா என பல பூகோள அரசியல் சக்திகள் அதற்காக போட்டி போடுகின்றனர். இலங்கையை ஒரு கருவியாகப் பயன்படுத்தி பூகோள சக்திகள் தங்களுக்குள்ளும் மோதிக் கொள்கின்றன. உதாரணத்திற்கு, உலகின் big brothers எனப்படும் சீனா அமெரிக்காவை எடுத்துக் கொள்வோம். அமெரிக்காவும் சீனாவும், இலங்கையை மையப்படுத்தி வெளிப்படையாகவே இப்போது அரசியல் மோதலை ஆரம்பித்துள்ளன. இலங்கை, தன்னுடைய நலன்சார் அரசியலை, சுதந்திரத்திற்கு முன்பு இருந்தே பின்பற்றி வருகிறது. சுதந்திரத்திற்கு பின்பு, அதன் இருப்பே சர்வதேச சக்திகளது இருப்பு சார்ந்ததாகவே அமைந்துள்ளது. ஆரம்பத்தில் பிரிட்டனுடன், பின்பு அமெரிக்கா, தற்போது சீனாவுடனும் இலங்கை நெருக்கமான உறவை பின்பற்றி வருகிறது. இதனால் அவ்வப்போது புவிசார் அரசியல் நெருக்கடிக்குள் அகப்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறது.

பெரிய நாடுகளுக்கு இலங்கை தேவை என்றும், இலங்கைக்கும் அந்நாடுகளின் நட்பு தேவை என்றும் அனைவருக்கும் தெரியும். ஆனால், இந்த உறவுகளை இலங்கை எப்படி தன் முன்னேற்றத்திற்காக பயன்படுத்திக் கொள்ளப் போகிறது என்பது குறித்த புரிதல் பலருக்கு தெளிவாக இல்லை. ஒரு காலத்தில், இந்திய பெருங் கடல் பகுதியில் இலங்கை ஒரு பொருளாதார சக்தியாக இருந்தது. இந்திய பெருங்கடலின் கடல்சார் அச்சுறுத்தல்கள் குறித்த தகவல்களின் மையமாகவும் இருந்தது. அந்த நிலைக்கு மீண்டும் திரும்ப எண்ணி, அதற்கான முயற்சிகளை இலங்கை எடுத்து வருகிறது இலங்கைக்கு. அதன் அமைவிடம் காரணமாகவே, பல பாதுகாப்பு அச்சுறுத்தல்களும் உள்ளன. மனிதர்களைக் கடத்தல், ஆயுதம் மற்றும் போதை பொருட்கள் கடத்தல், கடல் கொள்ளை போன்றவைகள், மேற்கு இந்திய பெருங்கடலில் அதிகமாக அரங்கேறுகின்றன. அதனால், இலங்கையின் கடற்படை வலுவாக்கப்பட்டது. மேலும், வெளிநாட்டு துறைமுகங்களும் வர ஆரம்பித்தன. இது எல்லாம், ஒரு வகையில் இலங்கைக்கு பாதுகாப்பு தான்.

இந்திய பெருங்கடலின் முக்கிய அங்கமாக இலங்கை வளர பொருளாதார அரசியற்தந்திரம் (economic diplomacy) மிக முக்கியம். அதற்கு, நாட்டின் உள் கட்டமைப்பு மேம்படுத்தப்பட வேண்டும். பல ஆண்டுகளாக நடந்த உள்நாட்டு போர், அதற்கு பெரும் தடையாக இருந்தது. அதனால், வேகமாக வளர்ச்சி அடைய, பல்வேறு ஆசிய நாடுகளுடன் பொருளாதார ஒப்பந்தங்களில் இலங்கை ஈடுபட தொடங்கியது. அந்த முயற்சியின் முக்கிய வெற்றியாக 2018ம் ஆண்டு கையெழுத்தான **FTA**–வை சொல்லலாம். அதில் தொடங்கி, பல உலக பொருளாதார அமைப்புகளுடன் கைகோர்க்க, இலங்கைக்கு வாய்ப்புகள் உள்ளது. பொருளாதார அரசியற்தந்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம், மாறி வரும் ஆசியாவின் பூகோள அரசியலில், இலங்கைக்கு ஒரு முக்கிய பங்கு உள்ளது என்பதை மறுக்க முடியாது.

சீனாவும் இலங்கையும் சுதந்திரமான நாடுகள். இந்த இரு நாடுகளும், அவரவர் தேவை மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப, வெளிநாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான உரிமைகள் உள்ளன. நெருக்கடியான காலங்களில் சீனாவும் இலங்கையும் பரஸ்பரம் ஆதரவாகவும் உறுதியாகவும் காணப்பட்டுள்ளன. சீனாவின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கை மாற்றங்கள் தெற்கு ஆசிய பகுதிகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. சீனாவின் எழுச்சி, லத்தீன் அமெரிக்க பகுதிகளில் கூட மாற்றத்தை ஏற்படுத்தும்போது, நமக்கு ஏற்படாதா என்ன? தெற்கு ஆசிய பூகோள அரசியல் என்று வரும் போது, சீனாவிற்கு அதில் முக்கிய பங்கு உள்ளது.

எந்த ஒரு நாடாக இருந்தாலும், அது வளரும் போதும், வளர்ந்த பின்னரும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு நாடுகளை சார்ந்து இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அதனாற்தான் வளர்ந்து வரும் இந்தியாவாக இருந்தாலும் சரி, வளர்ந்த அமெரிக்காவாக இருந்தாலும் சரி, அதன் அருகில் இருக்கும் நாடுகளில், மற்றும் வர்த்தக, இராணுவ உறவு கொண்டுள்ள நாடுகளில், தனக்கு சாதகமான ஆட்சியும் பொருளாதார சூழலும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். அமெரிக்கா போன்ற நாடுகள், ஒரு படி மேலே சென்று, வேறு ஒரு நாட்டில், தனக்கு தேவையான சூழலை உருவாக்கும் முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருக்கும். அதே மாதிரித்தான் சீனாவும். சீனாவின் அதிவேக வளர்ச்சிக்கு உலகெங்கும் பல சாதக சூழல்கள் தேவை. அந்த சாதக சூழலை ஏற்படுத்திக் கொள்ளவும் சீனா தயங்கியது இல்லை. முக்கியமாக தென் ஆசிய பகுதி உலக பொருளாதார செயற்பாட்டுக்கு மிக முக்கியமானது. கடந்த இரண்டு தசாப்தங்களில் சீனாவோடு ஒட்டு மொத்த தென் ஆசிய நாடுகளும் வளர்ச்சி அடைந்துள்ளன. அதனால் சீனாவுக்கும் தென் ஆசிய நாடுகளுக்குமான உறவில் கூட பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த பகுதியின் மிகப் பெரிய பாதுகாப்பு சேவைகள் மற்றும் பொருட்களின் விநியோகஸ்தராக சீனா உள்ளது. பாகிஸ்தான் மட்டுமன்றி, இலங்கையில் உள்நாட்டு போர் நடந்த நேரத்தில் கூட ஆயுதங்கள் கொடுத்துள்ளது. நேபாளின் உள்நாட்டுப் போரிலும் சீன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. இந்திய கிளர்ச்சியாளர்களிடமும் பர்மாவிடமும் கூட சீன ஆயுதங்கள் உள்ளன. இதன் மூலம் நமக்கு தெரிய வருவது என்னவென்றால், தெற்கு ஆசிய நாடுகளின் அரசியல் மற்றும் ஆட்சியில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சீனாவின் பங்கேற்பு உள்ளது. மறுபக்கமாக தெற்கு ஆசிய நாடுகளும் பலமான ஒரு நாட்டின் ஆதரவை எப்போதும் எதிர்பார்த்த வண்ணமே உள்ளன. அது அமெரிக்காவாக இருக்கலாம், சீனாவாக இருக்கலாம்.

இதில் நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், எந்த நாடாக இருந்தாலும், அமெரிக்கா

**"எந்த ஒரு நாடாக இருந்தாலும், அது வளரும் போதும், வளர்ந்த பின்னரும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு நாடுகளை சார்ந்து இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்"**

அல்லது சீனா என்று ஏதாவது ஒரு நாட்டுடன் தான் நட்பில் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. 50களில் வல்லரசு நாடுகளாக அமெரிக்காவும் ரஷ்யாவும் இருந்தன. அப்போது, இந்தியா இரு நாடுகளுடனும் நட்பாக இருந்து. தனக்கு தேவையானவற்றை இரு நாடுகளிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அதே போல் தான் பாகிஸ்தான், இலங்கை, போன்ற நாடுகள் தற்போது செயல்படுகின்றன. குறிப்பாக பாகிஸ்தானை பொறுத்தமட்டில், அது மூன்று கால்களில் நடக்க வேண்டிய கட்டாய சூழ்நிலையில் உள்ளது. அமெரிக்கா, சீனா, பின்னர் மத்திய கிழக்கு நாடுகளான சவுதி, ஈரான், துருக்கி (Turkey) – என, பல நாடுகளின் நட்புறவு அதற்குத் தேவைப்படுகிறது. கடந்த கால நிகழ்வுகளை வைத்து பார்க்கும் போது, ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா வெளியேறினால் அமெரிக்காவிற்கு பாகிஸ்தானின் தேவை இருக்காது. அதனால், பாகிஸ்தானுக்கு அமெரிக்காவின் ஆதரவும் குறையும். அதை உணர்ந்ததால் தான் பாகிஸ்தான் சீனாவுடனும் துருக்கி போன்ற நாடுகளுடனும் தனது நட்பை பலப்படுத்தும் முயற்சியை தொடர்ந்து எடுத்து வருகிறது.

இந்திய பெருங்கடலில் சீனாவின் கடற்படை நகர்வு சமீப காலங்களில் மாறி உள்ளது. 2012ம் ஆண்டில் இருந்து அந்நாட்டுக்கு இந்திய பெருங்கடலில் நிரந்தரமான படைக்கலன் உள்ளது. அதனால் சீனாவிற்கு இலங்கை போன்ற தீவு நாடுகளின் மீது உள்ள ஆர்வமும் அதிகரித்துள்ளது. அந்நாடுகளும் சீனாவின் இந்த ஆர்வத்தை தமக்கு எப்படி பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தோடும், எதிர்பார்ப்போடும் கையாள்கின்றன. சீனாவை போல் இந்தியாவிற்கும் இந்திய பெருங்கடலில் இருக்கும் நாடுகள் மீது ஆர்வம் அதிகரித்துள்ளது. இலங்கை, மாலைத்தீவு, சீஷெல்ஸ், மொரீஷியஸ், போன்ற நாடுகளின் கடல்சார் பாதுகாப்பு இந்தியாவுக்கு முக்கியமானது. அதனாற்தான் இந்த நாடுகளோடு பாதுகாப்பு சார்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

தெற்கு ஆசியாவை பொறுத்தவரைக்கும் தற்போது உள்ள சூழல் இது தான். ஒவ்வொரு நாடும் தன்னாட்டு நலனுக்காக பல நாடுகளுடன் நட்புறவில் இருக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. ஒட்டு மொத்த இந்திய பெருங்கடல் பகுதியில் அமைதி நிலவுவதற்காகவும் இந்த உறவுகள் அவசியம். அமைதி இல்லை என்றால் அதை எதிர்த்து போராடக் கூடிய எதிர்க்கக் கூடிய நிலையில் எந்த நாட்டின் அரசியல் சூழலோ, பொருளாதார சூழலோ இல்லை. முக்கியமாக இந்திய பெருங்கடலின் அமைதி இலங்கையின் வளர்ச்சிக்கு முக்கியம்.

(24 ஆம் பக்க தொடர்ச்சி)

பொறிமுறைகளையும் நகர்த்தாது, அவற்றுக் குரிய பொறிமுறைகளை மேற்கொள்ளாது வெறுமனே பார்வையாளர்களாக இருந்து கொண்டு இருக்கிறார்கள். அவ்வாறு இருந்து கொண்டு அரசியல் பொறிமுறையின் முக்கியத்துவத்தைப் பற்றி உரையாடுவது பெருமளவுக்கு பலவீனமான அரசியல் களமாகவே தெரிகிறது. பொத்துவில் முதல் பொலி கண்டி வரை போராட்டம் தவிர்ந்த காணாமல் ஆக்கப் பட்டோர் போராட்டங்கள், காணி விடுவிப்பு போராட் டங்கள் உட்பட பல போராட்டங்கள் அனைத்தும் மக்கள் போராட்டங்களாகவே இருக்கின்றன. இவை யெல்லாமே அரசியல்வாதிகளின் பங்களிப்புகள் இல்லாத போராட்டங்களாகவே இடம்பெறுகின்றன.

அதே போல் தான் சர்வதேச நாடுகளைப் பொறுத்தவரையிலும் தமிழ் அரசியல் தலைமை களின் அணுகுமுறைகள் மிகப்பலவீனமாக இருக் கின்றன. குறிப்பாக பொத்துவில் – பொலிகண்டி போராட்டத்தில் சிவில் அமைப்புகள் எடுத்த முயற்சி கள், அதே போல் லண்டனில் அம்பிகை அம்மையார் எடுத்துள்ள நகர்வுகளைக் கூட இவர்கள் முன்னெடுக் காது சர்வதேசத்தைக் குற்றம் சாட்டுவது, சேறுவாரிப் பூசுவது எல்லாமே அநாகரிகமான அரசியல் பொறி முறையாகவே நோக்கப்படுகின்றது.

சர்வதேச அரசியலில் மனித உரிமை அமைப்பு மற்றும் குற்றவியல் நீதிமன்றம் வரை நகர்த்தும் பொறி முறை என்பவற்றை சர்வதேசம் வைத்திருத்தல் என்பதனையே ஒரு பெரிய விடயமாக கருத வேண்டும். சர்வதேசத்தின் அரசியல் நலனையும் தமிழர்களுடைய அரசியல் நலனையும் ஒரே இடத்தில் சந்திக்க வைக்கின்ற பொறுப்பு பெருமளவுக்கு தமிழ் அரசியல் தலைமைகளுக்கும், புலம்பெயர்ந் தவர்களுக்கும் உரித்துடையது. புலம்பெயர்ந்த தளத்தில் செயற்பட்ட கணிசமானவர்கள் தமது கோரிக்கைகளை ஜெனீவா அரங்குக்குள் கொண்டு செல்ல வெற்றிகரமாக முயற்சித்திருக்கிறார்கள். ஆகவே அவர்களோடு இணைந்து பயணித்தல், இந்த பயணத்தை ஆரோக்கியமானதாக மாற்றுதல் எனும் பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

**“சர்வதேச அரசியல் களம் என்பது நாடுகளுக்கிடையிலான உறவுகள் சார்ந்தது. நாடுகளுடைய நலன்கள் சார்ந்தது. உறவு என்பது பெருமளவுக்கு நலன்களை மையப்படுத்தி இருக்கின்ற விடயம்”**

எங்களுக்கு ஆதரவாக வாக்களிக்கின்ற நாடுகள் எங்களது விடயங்களை முதன்மைப்படுத்து கின்ற நாடுகளுக்கு குறிப்பாக நன்றி சொல்ல வேண்டும். அங்கு நிறைவேற்றப்படும் தீர்மானத்துக் குரிய அங்கீகாரத்தை வழங்குதல், அதனை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். பின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட வேண்டும். எமது கோரிக்கைகளில் உறுதியாக நின்று கொண்டு ஆலோசனைகளை கருத்தாடல்களை நாடுகள், தூதுவர்களோடு முன்னின்று நடாத்த வேண்டும். மனித உரிமை பேரவையினரோடு மற்றும் அனுசரணை வழங்கு கின்ற நாடுகளோடு உரையாடுதல் என்பதுவும் அவசிய மான அரசியல் பொறிமுறையென்றும் நான் கருது கின்றேன். ஆகவே அந்த சூழலை நோக்கி தமிழ் அரசியல் தலைமைகள் செயற்பட வேண்டும்.

இதனை தவிர்த்து வெறும் குற்றச் சாட்டுகளை மட்டும் முன்வைத்துக் கொண்டு சர்வதேச சமூகத்தின் பாராமுகம் தான் இதற்கான அடிப்படைக் காரணம் என விவாதிப்பதில் எந்தவிதமான பயனும் இல்லை. இதை கடந்து தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக் கிடையில் உள்ள முரண்பாடுகள், பௌத்த பிக்குகளுக் கிடையில் உள்ள முரண்பாடுகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் மால்கம் ரஞ்சித் ஆண்டகை யின் அறிக்கை, குற்றவியல் நீதிமன்றம் தொடர்பிலான பேச்சுக்கள், புதிய அறிக்கையூடாக ஒரு நெருக் கடியை தென்னிலங்கைக்கு கொடுத்திருக்கின்றது.

தென்னிலங்கையில் கட்சியடிப்படையில், உள்ளரசியல் கட்டமைப்பு அடிப்படையில், பிராந்திய, சர்வதேச அரசியல் கட்டமைப்புகளின் அடிப்படையில், மற்றும் பொருளாதார அடிப்படையில் பாரிய நெருக் கடிக்குள் இலங்கை அரசியல் போக்கு இப்போது நகர ஆரம்பித்திருக்கின்றது. இத்தகைய சூழலை கருத்தில் கொண்டு தமிழ் அரசியற் தலைமைகளும், பிராந்திய சர்வதேச அரசியல் தலைமைகளுடன் செயற்படுகின்ற ஒரு பொறிமுறையை கண்டடைய வேண்டும்.

# சர்வதேச அரசியலில் தமிழ் அரசியல் தலைமைகளின் மிகப்பலவீனமான அணுகுமுறைகள்





சர்வதேச அரசியலில் ஒரு விடயத்தைக் கவனத்திற் கொள்ள வேண்டும். போர் நடந்த காலத்தில் இந்த அரசுகள் ஒன்றிணைந்து போரை வெற்றி கொள்வதற்கு ஒத்துழைத்தார்கள். இப்போது சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கிலும் இலங்கை தங்களது நலன்களுக்கு உட்பட்டதாக மாற்றப்பட வேண்டும் என்ற எண்ணங்களோடும் தான் இன்று அந்த அரசுகள் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. உலகின் எல்லா அரசுகளுக்கும் தங்கள் நலனே முதன்மையானது. தமிழர்களுடைய அரசியல் நலனை தமிழ் அரசியல் தலைமைகளே மேற்கொள்ள வேண்டும். அதற்கான உத்திகளை வகுக்க வேண்டும். அவற்றிற்கான உரையாடல்களை மேற்கொள்ள வேண்டும். அது சார்ந்திருக்கக் கூடிய பொறிமுறைகளை வெளிப்படுத்த வேண்டும். எனத் தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறையின் தலைவரான பேராசிரியர் கே.ரீ கணேசலிங்கம். அருவி செய்திகளின் சமகாலம் நிகழ்ச்சிக்கு வழங்கிய காணொலி நேர்காணலிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அதன் முக்கிய பகுதிகள் வருமாறு.

அண்மையில் இந்தியத்தூதுவர் வடக்கின் பல பிரதேசங்களுக்கும் சென்று அங்குள்ள அடிப்படை சூழல்கள், நிலைமைகள் தொடர்பில் உரையாடி வருகிறார். வடக்கு பறிபோகின்ற நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதன் விளைவே தூதரின் வடக்கு விஜயத்தின் பிரதான நோக்கமாகும். யாழ்ப்பாண தீவுகள் பெருமளவுக்கு சீனர்களின் கட்டுப்பாட்டுக்கு சென்றமை, யாழ்ப்பாண கலாசார மண்டபத்தை கொழும்பு அல்லது மத்திய அரசாங்கம் கைப்பற்ற எடுக்கின்ற முயற்சிகள் போன்றவை முக்கிய அரசியல் நிகழ்வுகளாக அவர்களால் பார்க்கப்படுகின்றன. அதிலிருந்து தாங்கள் விலகியிருக்க முடியாது என்பதன் எதிரொலியாகவே மேற்படி விஜயம் நோக்கப்படுகின்றது.

இலங்கையின் அரசியலில், மிக முக்கியமாக ஜெனீவா அரங்கை முன்னிட்டு, லண்டனில் அம்பிகை அம்மையாரின் உண்ணாவிரத நோன்பு ஏற்படுத்தியிருக்கும் நெருக்கடிகளும், அதற்கு ஆதரவாக வடக்கு கிழக்கில் தொடரும் சுழற்சி முறையிலானபோராட்டங்களும்,இலங்கையைசர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வது பற்றிய போராட்டமும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இலங்கையின் அரசியல் தலைமைகளையடுத்து ஜெனீவா அரங்கை புலத்திலுள்ள தமிழ் மக்களும் கையாள ஆரம்பித்திருக்கின்றனர். ஜெனீவா மனித உரிமைகள் பேரவையால் வெளியிடப்பட்ட அறிக்கை பொருத்தப்பாடுடையது எனும் நிலைப்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது. ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் அதில் காணப்படுகின்ற அம்சங்கள் அனைத்தும் பூச்சியமானவை என்றும் அவை நிராகரிக்கப்படக் கூடிய வாதங்கள் என்றும் கூறுகின்றன. புலம்பெயர் தேசத்து முக்கியமான அமைப்புக்களும் அவ்வாறு உரையாட ஆரம்பித்திருக்கின்றன. பலவீனமான அறிக்கை என்றும், அரசுகள் தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்து விட்டன என்ற வாதங்கள் தமிழ் அரசியல் பரப்பில் பெருமளவுக்கு முன்வைக்கப் படுகின்றன.

சர்வதேச அரசியல் களம் என்பது நாடுகளுக்கிடையிலான உறவுகள் சார்ந்தது. நாடுகளுடைய நலன்கள் சார்ந்தது. உறவு என்பது பெருமளவுக்கு நலன்களை மையப்படுத்தி இருக்கின்ற விடயம். ஆகவே நாடுகள் மீதான அணுகுமுறைகளை கையாளுகின்ற போது ராஜீய ரீதியிலும் இராஜதந்திர உரையாடலுக்கு ஊடாகவும் அணுகப்பட வேண்டும். இலங்கையின் தமிழ் அரசியல் தலைமைகளைப் பொறுத்தவரையில் எத்தகைய அரசியல்

(23 ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 20.03.2021 அன்று வெளியிடப்பட்டது.